
இன்பத்தை அள்ளித்தரும்
இந்துமதம்
3
தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# இன்பத்தை அள்ளித்தரும்
# இந்து மதம்

பாகம் - 03

தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# என்னுரை

அன்பார்ந்த வாசகர்களே! இது நாள் வரையும் ஆத்திசூடி, திருக்குறள், பகவத்கீதை, வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், திருமந்திரம் போன்ற இந்து மத நூல்களுக்குக் கதை எழுதினேன். இப்பொழுது மேற்கண்ட நூல் கூறும் வாழ்க்கைத் தத்துவங்களைக் கட்டுரைகள் மூலம் எழுதி வருகிறேன். இன்பமாக ஒருவன் வாழ எவையெவை அவசியமோ அவற்றையெல்லாம் இலகு தமிழில் எழுதி; ''இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம்'' என்ற பெயரில் வெளியிடுகிறேன். இத்தொடர் பத்து நூல்களாக வெளிவரும். இந்நூலை அழகுறக் கணணி மயப்படுத்தித் தந்த செல்வி க. தேனமிர்தம் அவர்கட்கும், பிரதியை ஒப்புநோக்கிப் பிழைகளைத் திருத்தித் தந்த செல்வி ப. இறைமகள் ஆசிரியைக்கும், இந்நூலை வெளியிடும் லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்,

கோட்டக்கல்விப் பணிப்பாளர்.
நல்லூர்,
இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

கே. வி. குணசேகரம்.
கோப்பாய் மத்தி கோப்பாய்.

ஔவையார் "ஏற்பது இகழ்ச்சி" என்றும், "ஐயம் இட்டுண்" என்றும் பாடியுள்ளார். இதன் கருத்து என்ன? தர்மம் செய்வது எப்படி?

வள்ளுவர் இரண்டடியிற் சொன்னதை ஔவையார் ஓர் அடியிற் சொல்லியுள்ளார். திருக்குறளின் சுருக்கம் தான் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் சூத்திரங்கள்.

"ஐயம் இட்டுண்" என்பதை ஈகை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

221. வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

வறியவர்களுக்குப் பொருட்களைக் கொடுப்பதே ஈகை. மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும்.

222. நல்ஆறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று.

ஒருவன் நன்மை செய்வதற்காகக் கூட பொருளைப் பிறரிடமிருந்து பெறக் கூடாது. மேலுலக நல்வாழ்வு இல்லா விட்டாலும் பிறருக்குக் கொடுப்பதே நல்லது.

223. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள.

'நான் வறியவன்' என்று ஒருவன் கூறுவதற்கு முன் கொடுப்பதே நற்குடியில் பிறந்தவனது பண்பாகும்.

229. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய

தாமே தமியர் உணல்.

தன்னிடம் குவிந்துள்ள பொருட்களைக் கொடுத்துதவாமல் தான் மட்டுமே அனுபவிக்கும் தன்மை, பிச்சை எடுப்பதை விடத் துன்பமானது.

வறியவர்கள், நோயாளிகள், தவசிகள், அங்கக் குறைபாடுகள் உள்ளவர்கள், பறவைகள் போன்றவற்றிற்கு தாமுண்ணுமுன் கொடுத்துவிட்டு உண்ணுதல் வேண்டும் என்பதேயே "ஐயம் இட்டுண்" என்று ஔவையார் சொன்னார். இதை விரிவாகத் திருவள்ளுவர் பல குறள்களிற் சொல்லியுள்ளார்.

அடுத்து இல்வாழ்க்கை என்ற அத்தியாயத்தில் இல்வாழ்வானின் கடமைகளை இப்படிச் சொல்கிறார்.

42. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், இரப்போர்க்கும் துணையாக இருப்பவன் இல்வாழ்வானே.

43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர் என்பவர்களுடன் தன்னையும் போற்றுதல் இல்வாழ்வானது தலையாய கடனாகும்.

44. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

பழிக்கு அஞ்சி அறவழியில் பொருள்சேர்த்து அதனைப் பகிர்ந்துண்டு வாழும் இல்வாழ்வானது பரம்பரை என்றும் அழியாது நிலைத்து நிற்கும்.

46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்?

ஒருவன் அறநெறிகளுக்குட்பட்டு இல்வாழ்வு வாழ்வதே சிறப்பானதாகும். அதை விடுத்து துறவு வாழ்வினை மேற்கொள்வதால் எந்தப் பயனையும் அவன் அடையமாட்டான்.

இல்வாழ்வான் கட்டாயம் தானம் செய்தல் வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

அடுத்து விருந்தோம்பல் என்ற அதிகாரத்தில் இப்படிக் கூறுகிறார்.

81. இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள்களைத் தேடிக்காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பேணி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

82. விருந்து புறந்ததாத் தான்உண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற் றன்று.

விருந்தினர் வந்து வீட்டின் புறத்தே இருக்கத் தான் மட்டும் உண்பது சாவைத் தவிர்க்கின்ற அமிர்தமாக இருந்தாலும் அது விரும்பத்தக்கது அல்ல.

83. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

தினமும் தன்னை நாடிவரும் விருந்தினரை வரவேற்று உபசரிக்கின்றவனுடைய வாழ்க்கை வறுமையால் வருந்திக் கெட்டுப் போவதில்லை.

84. அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

முகமலர்வோடு விருந்தினரை வரவேற்று உபசரிக்கின்றவனது வீட்டில் மனமகிழ்வோடு திருமகள் வாழ்வாள்.

85. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்துஓம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

விருந்தினரைப் போற்றி உணவளித்து எஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் வித்திடாத இடமும் விளைச்சலைக் கொடுக்கும்.

86. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்துஇருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

தன்னிடம் வந்த விருந்தினரைப் போற்றி உபசரித்து, இனிவரும் விருந்தினரைப் போற்றி உபசரிக்கக் காத்திருப்பவன் வானுலகத்தில் உள்ள தேவர்களுக்கு நல்ல விருந்தினனாவான்.

87. இனைத்துணைத்து என்பதொன்று இல்லை; விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

விருந்தோம்பல் என்னும் வேள்வியின் பயன் இவ்வளவு என்று அளவுபடுத்திக் கூறமுடியாது. விருந்தினரின் தகுதியின் அளவே அந்த வேள்வியின் அளவாகும்.

விருந்தோம்பலைப் பற்றி இவ்வாறு வள்ளுவர் சிறப்பித்துக் கூறுகிறார்.

இப்படி வள்ளுவரும் ஔவையாரும் தானம் செய்வதைப் பற்றிச் சிறப்பித்துக் கூறிவிட்டுப் பின் “ஏற்பது இகழ்ச்சி” என்று கூறியது ஏன்? என்று கேட்போர் பலர்.

நோயில்லாதவர்கள், பொருளுடையவர்கள், அங்கக் குறைபாடுகள் இல்லாதவர்கள், தவசிகளல்லாதவர்கள் இரக்கக் கூடாது.

இரத்தல் பற்றி வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்.

1061. கவராது உவந்துஈயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்.

உள்ளதை ஒளிக்காமல் மனமகிழ்வுடன் கொடுக்கும் கண்களைப் போல் சிறந்த பண்புடையவர்களிடத்திலும் சென்று இரவாமல் இருப்பது கோடி மடங்கு நல்லதாகும்.

1062. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்!.

உலகத்தைப் படைத்தவன் இரந்து தான் உயிர்கள் வாழ வேண்டும். என்ற நிலையில் சில உயிர்களைப் படைத்திருந்தால், அப்படிப் படைத்தவன் இரப்பவர்களைப் போல எங்கும் அலைந்து திரிந்து கெட்டுப் போகட்டும்.

1063. இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

வறுமைத் துன்பத்தை இரப்பதன் மூலம் தான் தீர்க்க முடியும் எனக் கருதி முயற்சியைக் கைவிடுவதைப் போன்ற கொடுமை வேறு இல்லை.

1064. இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக்
காலும் இரவுஒல்லாச் சால்பு.

வாழ வழியில்லாத நிலை வந்த போதும் கூட இரந்து வாழ விரும்பாத உயர்நத பண்பு, இந்த உலகத்தில் உள்ள இடமெங்கும் கொள்ளாத பெருமை உடையதாகும்.

1065. தெள்நீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்குஇனியது இல்.

தனது முயற்சியால் சமைத்த தெளிந்த நீரைப் போன்ற கூழே ஆயினும், அதை உண்பதை விட இனிமையானது வேறொன்றுமில்லை.

1066. ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு

இரவின் இளிவந்தது இல்.

பசுவிற்கு நீர் வேண்டும் என்று இரந்து கேட்டாலும் அந்த இரத்தல் நாவிற்கு மிகவும் இழிவானது ஆகும்.

யார் யாரிடம் இரக்கக் கூடாது என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

1057. இகழ்ந்துஎள்ளாது ஈவாரைக் காணின் நிரப்பு இடும்பை

உள்ளுள் உடைப்பது உடைத்து.

அவமதித்துக் குற்றஞ் சொல்லாது பொருள் கொடுப்பவர்களைக் கண்டால் இரப்பவரின் உள்ளம் பெருமகிழ்வு கொள்ளும்.

1067. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்

கரப்பார் இரவன்மின் என்று.

உள்ளதை மறைத்து வைத்து விட்டு இல்லை என்று சொல்வோரிடம் சென்று இரந்து கேட்க வேண்டாம். என்று இரப்பவர்கள் எல்லோரையும் இரந்து வேண்டுகிறேன்.

மேற்கூறிய குறள்களில் வள்ளுவர் கூறியதை நான் கூறியுள்ளேன். அத்துடன் இரப்பவர்கள் இல்லாவிட்டால் உலகம் எப்படி இருக்கும் என்றும் வள்ளுவர் கூறியுள்ளார்.

1058. இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்

மரப்பாவை சென்றுவந் தற்று.

இரப்பவர்கள் எவரும் இல்லையானால், இப்பெரிய உலகின் இயக்கம் மரததால் செய்யப்பட்ட பாவையை கயிற்றால் இயக்குவது போன்றதாகும்.

1059. ஈவார்கண் என்உண்டாம் தோற்றம் இரந்துகோள்

மேவார் இலாஅக் கடை?

பொருள் இல்லாமையால் இரந்து அதைப் பெற்றுக் கொள்வோர் இல்லாது விட்டால், பொருள் கொடுத்துப் புகழ்பெறுவோரும் இல்லாது போவர்.

இரப்பவர்கள் இருந்தால் தான் கொடுப்பவனுக்குப் புகழ் உண்டாகும். அதை இப்படி வள்ளுவர் கூறுகிறார்.

231. ஈதல்; இசைபட வாழ்தல்; அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

வறியவர்களுக்கு உதவி செய்து, அதன் மூலம் புகழ் பெற்று வாழ வேண்டும். அந்தப் புகழைத் தவிர உயிர்களுக்கு நன்மை தருவது வேறொன்றும் இல்லை.

232. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.

புகழ்ந்து சொல்கின்றவர்கள் சொல்பவையெல்லாம், வறுமையால் துன்பப்படுபவர்களுக்கெல்லாம் கொடுத்து உதவுபவர்களின் புகழைப் பற்றியே ஆகும்.

வள்ளுவரை விடச் சிறப்பாக யாரும் அறம், பொருள், இன்பத்தைப் பற்றிக் கூறவில்லை. மேற்கூறப்பட்ட குறள்களிலிருந்து ‘‘ஐயம் இட்டுண்’’ என்பதையும் ‘‘ஏற்பது இகழ்ச்சி’’ என்பதையும் விளங்கிக் கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். ஒவ்வொருவரும் செய்யும் கர்மங்கள் மூலம் அவர்கள் வறுமையையும் செல்வத்தையும் பெறுகின்றனர். பொருள் படைத்தோர் அதைப் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க கர்ம வினைகள் குறையும் என்று தர்ம நூல்கள் கூறுகின்றன. வறுமை கொடியது. அதனிலும் கொடியது இளமையில் வறுமை என்று ஔவையார் சொல்லுகிறார். வறுமையைப் பற்றி வள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

1046. நற்பொருள் நன்குஉணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்

சொற்பொருள் சோர்வு படும்.

வறியவர் நல்ல நூல்களில் பொருளை நன்றாகக் கற்றுணர்ந்து எடுத்துச் சொன்னாலும் அதைக் கேட்பதற்கு யாரும் இரார். அதனால் அவர் சொன்ன அந் நூற் பொருள் பயனற்றுப் போகும்.

1047. அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்

பிறன்போல நோக்கப் படும்.

அறத்தோடு பொருந்தாத வறுமை ஒருவனைச் சோந்தால் பெற்ற தாயும் அவனை அன்னியனாகக் கருதிப் புறக்கணிப்பார்.

1048. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்

கொன்றது போலும் நிரப்பு.

“நேற்று கொலை செய்தது போலத் துன்புறுத்திய வறுமை இன்னும் என்னிடம் வருமோ;” என்று வறியவன் நாள் தோறும் கலங்கித் துன்புறுவான்.

1049. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்

யாதுஒன்றும் கண்பாடு அரிது.

ஒருவன் நெருப்பினுள்ளே தூங்க முடியும். ஆனால் வறுமைப்பட்டால் ஒருநாளாவது கண்மூடித் தூங்க முடியாது.

இப்படிப்பட்ட வறியவர்களுக்குக் கொடுத்தேயாக வேண்டும். அதனால் தான் ஔவையார் “ஐயம் இட்டுண்” என்கிறார். இன்று பணக்காரர்கள், தேகாரோக்கியம் உள்ளவர்கள் பலர் உழைக்கப் பஞ்சிப்பட்டு இரக்கின்றனர். அவர்களுக்குப் புத்திமதியாகத்தான் “ஏற்பது இகழ்ச்சி” என்று ஔவையார் சொன்னார். தர்மம் செய்வது எப்படியென்று கேட்டீர்கள். வலது கை கொடுப்பதை இடது கை

அறியக்கூடாது என்று பெரியார்கள் கூறியிருக்கிறார்கள். ஒன்றாக இருந்துகொண்டு வலது கை கொடுப்பதை இடது கை எப்படி அறியாது கொடுக்கலாம் என்று பலர் நினைக்கின்றனர். ஒரு மனிதனின் இடது பக்கத்திற்குரியவள் அவனது மனைவி. இதை உணர்த்தத்தான் சிவன் அர்த்தநாரீஸ்வரராக இருக்கிறார். வள்ளுவர் வாழ்க்கைத் துணைநலம் என்ற அத்தியாயத்தில் மனைவியைப் பற்றி இவ்வாறு சொல்லுகிறார்.

53. இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?

நற்குணங்களையுடைய இல்லாள் வாழும் வீட்டில் இல்லாதவையென எதுவும் இருக்கமாட்டாது. நற்குணங்கள் அவளிடம் இல்லையாயின் அவ்வீட்டில் எதுவும் இராது.

குடும்பத்தின் முன்னேற்றத்துக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் குடும்பத்திற்காக வாழும் பெண்ணே சிறந்த பெண். அவள் தன்னலங்கருதாது தனது குடும்பத்தினதும் கணவனினதும் நலன்களைப் பேணி வாழ்வாள். அத்தகைய சிறப்புக்கள் பெற்ற உயர்ந்த பெண்ணாக இருந்தாலும் அவளும் அறியாது கொடுப்பது தான் கொடையென்று அம்முதுமொழி விளக்குகிறது.

தர்மம் என்பது எந்தவிதமான சுயநலநோக்கும் இல்லாமல் பணம், பொருள், புகழில் அக்கறை கொள்ளாமல், பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக மட்டும் செய்யப்படுவது. அப்படிச் செய்யும் தர்மத்தை அன்றே மறந்துவிடல் வேண்டும்; அதைப்பற்றி எவருக்கும் சொல்லுதல் கூடாது. இப்படித் தர்மம் செய்பவனுக்கும் கடவுளுக்கும் வித்தியாசம் இல்லை.

தான் செய்வதைப்பற்றிச் சொல்லிக்கொண்டு திரிவது மிகப்பெரிய பாவமாகும். குலையை ஈன்றதும் இறந்துவிடும் வாழையைப் போலச் செய்ததைச் சொன்னதும் அதற்கான பலன் மறைந்துவிடும். இத்தகைய தன்னலமற்ற தர்மம் தான் ஒருவனை உயர்த்தும். அவனே ஆத்மீக வாழ்க்கை வாழ்கிறான்.

கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதை உணர்ந்து கொள்பவன் கடவுளுக்குச் செய்யும் சேவையாகப் பிறருக்கு உதவுவான். தர்மம் என்று சொல்லும் போது, கொடுக்கப்படும் பொருளையும் பணத்தையும் தான் எல்லோரும் சிறப்பாக நினைக்கிறார்கள். ஒருவன் மீது செலுத்தும் அன்பும் தர்மம் தான். உயிர்கள் மீது அன்புள்ளவன் தான் இரக்கப்பட்டுத் தர்மம் செய்வான். இதனால் ஒருவரிடம் குடியிருக்கும் தெய்வத்தன்மை வெளிப்படும். தூய்மையாக இருப்பதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் தர்மத்துடன் வாழ்பவனின் செயலாக இருக்கும்.

ஒருவன் தர்மம் செய்யும் பொருள் அவனுக்குரியதாக இருத்தல் வேண்டும். அவன் அதை மெய்வருந்திப் பெறல் வேண்டும். கலப்பட வியாபாரம் செய்தோ, ஏமாற்றியோ, களவெடுத்தோ, பிறரிடம் பொருள் பெற்றோ செய்யும் தானபலன் பொருளுக்குரியவனையே சென்றடையும்.

தர்மம் செய்யும் போது மிக மிக அவதானமாக இருத்தல் வேண்டும். பொதுச்சேவை செய்வோர் பிறரிடம் சேகரிக்கும் பணத்தையோ, பொருளையோ தனது தேவைக்குப் பயன்படுத்தலாகாது. அப்படிப் பயன்படுத்தினால் அக் குடும்பத்தினது எதிர்கால வாழ்வு நாசமாகிவிடும். உண்மை, நேர்மை, தன்நம்பிக்கை உள்ளவர்களால் மட்டும் தான்

தர்மத்தைக் கடைப்பிடிக்க முடியும். வள்ளுவர் அறத்தைப் பற்றி இப்படிக் கூறுகிறார்.

34. மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்துஅறன்;
ஆகுல நீர பிற.

ஒருவன் மனத்தூய்மையுடன் வாழ்வதே அறமாகும். மற்றயனவெல்லாம் வெறும் ஆரவாரங்களாகும்.

35. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொற்கள் ஆகிய நான்கையும் தவிர்த்து வாழ்தலே உண்மையான அறமாகும்.

39. அறத்தான் வருவதே இன்பம் ; மற் றெல்லாம்
புறத்த; புகழும் இல.

அறச் செயல்களால் வருவதுதான் இன்பம். அறமற்ற செயல்களால் துன்பம் வருவதோடு புகழும் கெடும்.

163. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணாது அழுக்கறுப் பான்.

தனக்கு அறமும் ஆக்கமும் வருவதை விரும்பாதவனே, பிறனுடைய ஆக்கத்தைக் கண்டு மகிழாமல் அதற்காகப் பொறாமைப்படுவான்.

173. சிற்றின்பம் வெ.ஃகி அறன்அல்ல செய்யாரே
மற்றுஇன்பம் வேண்டு பவர்.

அறநெறியால் வந்தடையும் பேரின்பத்தை விரும்புபவர்கள் சிற்றின்பத்தைத் தரும் அறனல்லாத செயல்களைச் செய்யார்.

179. அறன்அறிந்து வெ.ஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந்து ஆங்கே திரு.

அறநெறியை அறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரை செல்வம் தேடிச் சென்றடையும்.

212. தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

ஒப்புரவாளன் சிரமம்பட்டுப் பொருட்களைத் தேடுவது தக்கவர்களுக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

213. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

பிறருக்கு உதவி செய்து வாழும் ஒப்புரவாகிய உயர்ந்த செயலைப் போன்ற நற்செயலை இவ்வுலகிலும் தேவர் உலகிலும் காணமுடியாது.

214. ஒத்து அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

உலக நடையை அறிந்து அதன்படி வாழ்பவனே உயிர் வாழ்பவனாகக் கருதப்படுவான். அப்படி வாழாதவன் செத்தவனாகவே கருதப்படுவான்.

219. நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு.

பிறருக்கு உதவுகின்ற நற்பண்பாளன், பிறருக்கு உதவ வேண்டியதை உதவமுடியாமல் போவது தான் அவனுக்கு வறுமையாகும்.

244. மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு இல்லென்ப
தன்உயிர் அஞ்சும் வினை.

உலகில் வாழும் உயிர்களைக் காப்பாற்றி வாழும் அருளாளனுக்குத் தன்னுடைய உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற இழிவான நிலை இல்லை.

247. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகில் இன்பமான வாழ்க்கை இல்லாதது போல, உயிர்களிடத்தில் அருளில்லாதவர்களுக்கு அவ்வுலக வாழ்க்கை இல்லை.

தர்மத்தைப் பற்றி விவேகானந்தர் இப்படிச் சொல்கிறார்; “இல்லை என்று ஒரு போதும் சொல்லாதே. என்னால் இயலாது என்றும் சொல்லாதே. ஏனென்றால் நீ வரம்பில்லாத வலிமை பெற்றவன். நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவன். சர்வ வல்லமை படைத்தவன்”

பகவத்கீதையில் கர்ம யோகத்தைப் பற்றிப் பகவான் இப்படிச் சொல்கிறார்; “கர்மங்களனைத்தையும் எனக்கு அர்ப்பணித்து, ஆசைகளையும், மமகாரத்தையும் அகற்றி மனக்கொதிப்பின்றிக் கர்மங்களைச் செய்இ அப்படிச் செய்பவர்கள் வினைகள் அனைத்திலிருந்தும் விடுபடுவார்கள். நெருப்பானது புகையினாலும், சிசு கர்ப்பப்பையினாலும் மூடப்பட்டிருப்பது போன்று ஞானம் ஆசைகளால் மூடப் பட்டிருக்கிறது. ஆகையால் இந்திரியங்களை அடக்கி ஆசையை அறவே ஒழித்துவிடு. மனதைச் சமநிலையில் உறுதிப் படுத்தியவர்களால் இம்மையிலேயே இயற்கைவெல்லப்படுகிறது. வெல்லப்பட்டவர்கள் பிரம்மத்துள் நிலைத்திருப்பார்கள்”.

எனவே தர்மம் செய்வோர் பற்றின்றிச் செய்தல் வேண்டும்.

மகாபாரதயுத்தம் முடிந்து தருமருக்கு முடிசூட்டுவிழா நடைபெற்ற பின்பு தருமன் கிருஷ்ணனிடம் வந்து கவலையுடன் சொன்னான்; “பிரபு, நாம் யுத்த தர்மத்தை மீறாது தர்மயுத்தம் செய்தபோதும் பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் கொன்றுவிட்டோம். கௌரவர்கள் செய்த குற்றங்களுக்காக

அவர்களுடன் கூட இருந்த பெரியவர்களையெல்லாம் கொன்றதை நினைக்க எனக்குக் கவலையாக இருக்கிறது'' என்றான்.

அதைக்கேட்ட கிருஷ்ணபரமாத்மா சிரித்தார். அவரின் அருகிலிருந்த வியாசர் சொன்னார்; ''உனது கவலை நியாயமானதல்ல. இருப்பினும் உனது மனநிறைவுக்காக மூன்று அஸ்வமேத யாகங்களைச் செய்''

''கிருஷ்ணா, அஸ்வமேத யாகங்கள் மூன்றைச் செய்வதனால் கோடிக்கணக்கில் பொருள் வேண்டும். என்னிடம் எந்தப் பொருளுமில்லை. மக்களிடம் பொருள் பெற்று நான் அஸ்வமேத யாகத்தைச் செய்ய விரும்பவில்லை. நல்வழியில் பெறப்பட்ட பணத்தைக் கொண்டே யாகம் செய்தல் வேண்டும்'' என்றார் தர்மர்.

''உண்மைதான், நீ மக்களிடம் பொருட்களைக் கேட்காது பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு மருத் என்ற மன்னன் அஸ்வமேத யாகம் செய்த பின்பு பிராமணர்களுக்குப் பொன்னும் மணியும் நவரத்தினமும் மலையளவு கொடுத்தான். பிராமணர்கள் தம்மால் தூக்கிச் செல்லக்கூடியவற்றைத் தூக்கிச் சென்றனர். அவர்களால் விட்டுச் சென்ற பொருள் இன்னும் அத்தேசத்தில் தேடுவாரற்றுண்டு. அத்தோடு அந்த இடம் உனது ஆட்சிக்குட்பட்டது. அதை எடுத்து யாகத்தைச் செய்'' என்றார் அரசனான தர்மனே யாகம் செய்ய மக்களின் பொருளை எடுக்க விரும்பவில்லை. தானம் செய்வது தனது ஆத்ம ஈடேற்றத்திற்கு என்பதை தானம் செய்வோர் உணரல் வேண்டும்.

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் கோயில்களுக்குப் பொங்கிப் படைப்பதில்லை. அர்ச்சனை கூடச் செய்வதில்லை. உலகைப் படைத்து உயிர்களைப் படைத்து, அவ்வுயிர்களுக்குத் தேவையான அனைத்தையும் படைத்த கடவுளுக்கு நாம் எதையும் கொடுக்கத்தேவையில்லை. கடவுளாற் படைக்கப்பட்ட போதும் அறியாமை காரணமாகப் பாவங்கள் பலவற்றைச் செய்து துன்பத்தில் உழரும் உயிர்களுக்குத் தான் உதவிகள் செய்தல் வேண்டும், எனது கிராமத்தில் உள்ள பிள்ளையார் கோயில் உண்டியலில் என்னால் இயன்றவற்றைப் போடுகிறேன்'' என்பார். இப்படிச் செய்வதன் மூலம் புகழ்கருதாது தருமம் செய்கிறார். இப்படி எல்லோரும் இருந்தால் உலகம் இன்பப் பூங்காவாக இருக்கும்.

தற்பொழுது எண் சோதிடப்படி பெயர்களை வைக்கிறார்கள். இதனால் தமிழ் சிதைக்கப்படுகிறது. சிலரின் பெயர்களுக்கு அர்த்தமே இருப்பதில்லை. இதனால் பாதிப்புக்கள் உண்டாகுமா...?

சோதிடக் கலையில் எண்கள் முக்கியத்துவம் வகிக்கின்றன. நவக்கிரகங்கள் ஒன்பது இருப்பது போன்று எண்களும் ஒன்பது மட்டுமே உள்ளன. அந்த ஒன்பதிலிருந்து பெருகியவை தான் எண்கள். ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு எண்கள் உண்டு. சூரியனுக்கு ஒன்று, சந்திரனுக்கு இரண்டு, செவ்வாய்க்கு மூன்று, புதனுக்கு நான்கு, குருவிற்கு ஐந்து, சுக்கிரனுக்கு ஆறு, சனிக்கு ஏழு, ராகுவிற்கு எட்டு, கேதுவிற்கு ஒன்பது. இதுபோலப் பன்னிரு இராசிகளுக்கும் எண்கள் உண்டு.

சிம்மம் ஒன்று, கடகம் இரண்டு, தனுசு, மீனம் ஆகிய இரண்டு இராசிகளுக்கும் மூன்று, கன்னி, மிதுனம் ஆகிய இரு இராசிகளுக்கும் ஐந்து, துலாம், ரிஷபம் ஆகிய இரு இராசிகளுக்கும் ஆறு, மகரம், கும்பம் ஆகிய இரு இராசிகளுக்கும் எட்டு, மேஷம், விருச்சிகம் ஆகிய இரு இராசிகளுக்கும் ஒன்பது. இப்படி எண்களுடன் சம்பந்தப்படாத சோதிடம் இல்லை.

தமிழர்களின் சோதிடத்தைப் பொறுத்தவரையில் ஒன்பது கிரகங்கள் உள்ளன. அதுபோலப் பன்னிரு இராசிகளும் உள்ளன. இப்பன்னிரு இராசிகளுள் இருபத்தேழு நட்சத்திரங்கள் உள்ளன. இந்நட்சத்திரங்களிற் பிறப்பவர்களுக்குப் பெயர் வைப்பதற்கென எழுத்துக்கள் சில வரையறுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக அச்சுவினி நட்சத்திரத்தில் பிறந்த ஒருவருக்கு சு, சே, சோ, ல போன்ற எழுத்திலொன்று பாத எழுத்தாக வரவேண்டும் என்று சோதிடக்கலை கூறுகிறது.

நான் திருகோண நட்சத்திரத்தில் பிறந்தேன். திருகோண நச்சத்திரத்திற்குப் பாத எழுத்தாக கி, கு, கே, கோ என்ற எழுத்துக்கள் உள்ளன. அதனால் எனது தந்தையார்எனக்குக் குணசேகரம் என்று நாமமிட்டார்.

பொதுவாக எழுத்துக்கள், எண்கள் என்பன மந்திர சக்தியுள்ளவை. அவற்றைத் தினமும் உச்சரிப்பதன் மூலம் அவை வலுப்பெறுகின்றன. அதனால் நாம் பிறந்த குழந்தைக்குப் பெயர் வைக்கும் போது மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். அந்தப் பெயர் பரம்பரை பரம்பரையாக நிலைத்திருந்து அந்தப் பரம்பரையை வளர்க்கும்.

கடவுளுக்குள்ள சக்தியிலும் பார்க்க அவரது நாமத்திற்குத் தான் சக்தி அதிகம். கடவுளை நாமமின்றி

அழைக்கவோ, வணங்கவோ முடியாது. ஒவ்வொரு தெய்வங்களுக்கும் இலட்சக்கணக்கான நாமங்கள் உண்டு. கோயில்களில் இலட்சார்ச்சனை செய்யும் போது அக்கோயிலின் மூலமூர்த்தியின் நாமங்களை இலட்சம் முறை அந்தணர்கள் கூடியிருந்து உச்சரிக்கின்றனர். அந்நாமங்கள் மந்திரங்களாகி உறுதிபெற்று உச்சரிப்பவனுக்குப் பெரும் இன்பங்களைக் கொடுக்கும்.

ஒருவன் ஓராபத்தில் சிக்கிவிட்டால் ‘‘கடவுளே கடவுளே’’ என்று உச்சரிப்பதிலும் பார்க்க ‘‘பிள்ளையாரே’’ என்றோ, ‘‘பரமேஸ்வரா’’ என்றோ, ‘‘முருகா’’ என்றோ, ‘‘நாராயணா’’ என்றோ உச்சரிப்பது சிறந்தது. உடனே பலன்தர வல்லது.

இறைவன் எல்லா உயிர்களிடத்தும் இருப்பதால் அடியவர்கள் பெயர் சொல்லி அழைக்கும் போது உடனே ஓடிவந்து உதவிகள் செய்வான்.

நாவலடி என்ற கிராமத்தில் வேலாயுதம் என்றொரு பெரியவர் இருந்தார். அவருக்கு இரண்டு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் இருந்தனர். மூத்த மகனுக்கு அவர் ‘‘டிவாகர்’’ என்றும் இளைய மகனுக்கு ‘‘டுசாதர்’’ என்றும், மகளுக்கு ‘‘டில்மினி’’ என்றும் பெயர் வைத்தார்.

ஒரு நாள் அவர் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் படுத்திருந்தார். அவரால் எழும்பி நடக்க முடியவில்லை. அவருக்கு அருகே ஒரு நாகபாம்பு வந்தது. அவர் எழும்பமுடியாமையால், ‘‘டிவா, டிவா’’ என்று பலமுறை அழைத்தார். பின் ‘‘டுசா, டுசா என்றும் அதன் பின் ‘‘டில், டில்’’ என்றும் அழைத்தார். வீட்டில் அவர்கள் இல்லாததால் அவர்கள்

வரவில்லை. அடுத்த வீட்டுக்காரருக்கு அவர் அழைத்தது கேட்டது. அவர் தனது பிள்ளைகளை அழைக்கிறார் என்று நினைத்து அவர் தனது வேலையைக் கவனித்தார்.

சிறிது நேரத்தின் பின் ‘‘ரகுராமா, பாலச்சந்திரா, பரமேஸ்வரா’’ என்று அழைத்தார். வீதியாற் சென்றுகொண்டிருந்த பலர் அங்கு ஓடிவந்தனர்.

பெயரை நாம் நட்சத்திரங்களுக்கேற்ப வைக்கலாம். அதில் எண்சோதிடத்தையும் பார்க்கலாம். திருகோண நட்சத்திரத்தில் ஏழாந்திகதி பிறந்த ஒரு ஆண் பிள்ளைக்கு கி, கு, கே, கோ என்ற எழுத்துக்கள் வரும்படியாக எண்சோதிடப்படி பெயர் வைக்கலாம்.

நம் முன்னோர் இறைவனின் நாமங்களையே தமது பிள்ளைகளுக்குச் சூட்டினர். இதற்குக் காரணம் உண்டு.

பகவத்கீதையில் பக்தியோகத்தில் பகவான் மஹாவிஷ்ணு இப்படிக்கூறுகிறார்; ‘‘என்னிடத்தில் மனதை வைத்து யார் என்னை உபாசிக்கிறார்களோ அவர்களுடன் நான் கூடியிருக்கிறேன். அவர்கள் என்னை வந்தடைவார்கள். தினமும் எனது நாமத்தை உச்சரிப்பவர்களை நான் மரண ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரையேற்றுகிறேன். எனது நாமத்தை பக்தியுடன் சொல்பவன் என்னிடத்தில் வசிப்பவனாகிறான். சிரத்தையுடன் அமிர்தம் போன்ற எனது நாமத்தை உச்சரிப்பவர்களே எனக்குப் பிரியமானவர்கள்’’.

இதை விளக்கப் பல கதைகள் உண்டு. அதில் ஒன்றை உங்களுக்காகத் தருகிறேன்.

நாரதர் மகாவிஷ்ணு மீது அளவில்லாத பக்தியுள்ளவர். எந்த நேரமும் ‘‘நாராயணா’’ என்று உச்சரிப்பவர். அவருக்குத்

தன்னைவிட ஒரு பக்திமான் உலகில் இல்லையென்ற மமதை இருந்தது. அதைப்போக்க விரும்பிய மஹாவிஷ்ணு; ‘‘ஒரு ஏழை நெசவாளியே எனக்குப் பிரியமானவன்’’ என்றார். நாரதருக்கு அவமானமாக இருந்தது. அவர் பூவுலகிற்கு வந்து அந்த நெசவாளியின் வீட்டிற்கு வந்து அவனை அவதானித்தார். அவன் ஓரிரு முறை மட்டும் பகவானின் நாமத்தை உச்சரித்தான். நாரதர்திரும்பி வந்து மஹா விஷ்ணுவிற்கு அங்கு நடந்ததைச் சொன்னார். மஹாவிஷ்ணு ஓர் எண்ணெக் கிண்ணத்தை நாரதரின் கையிற் கொடுத்து அதைச் சிந்தாமல் நகரைச் சுற்றிவரச் சொன்னார்.

மிகுந்த அவதானத்துடன் நாரதர் நகரைச் சுற்றி வந்தார். அப்பொழுது மஹாவிஷ்ணு கேட்டார்; ‘‘நாரதா, நீ எண்ணைக் கிண்ணத்துடன் நகரைச் சுற்றும் போது எத்தனை தடவை என்னை நினைத்தாய்’’

நாரதர் தடுமாறியபடி; ‘‘அவதானத்துடன் கர்மமாற்றும் போது எதைப் பற்றியும் என்னால் சிந்திக்க முடியவில்லை’’ என்றார்.

பக்தியுடன் ஒருமுறை கடவுளை அழைத்தாலும் அவர் தனது பக்தனுக்காக எதையும் செய்வார். இதனால் தான் நம் முன்னோர் தெய்வங்களின் பெயர்களைத் தமது பிள்ளைகளுக்குச் சூட்டினார்.

ஒரு தந்தை ‘கஜேந்திரன்’ என்று தனது பிள்ளைக்கு நாமஞ் சூட்டிவிட்டுப் பலமுறை அவனைப் பெயர் சொல்லி அழைக்கிறார். அதன் மூலம் பிள்ளையாரை அடிக்கடி

அழைக்கிறார். அவனது நண்பர்கள் அவனது நாமத்தைச் சொல்வதன் மூலம் பிள்ளையாரின் அருளைப் பெறுகின்றனர்.

ஒரு குடியானவன் விநாயகர் மீது மிகுந்த பக்தியுள்ளவன். அவனுக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையும் இருந்தனர். மூத்தவனுக்கு அவர் கணேசன் என்றும் மற்றவனுக்கு கஜேந்திரன் என்றும் மகளுக்குச் சித்திரா என்றும் பெயர் வைத்தார்.

அவர் ஒரு நாள் அயற்கிராமத்திற்குத் தனது நண்பனைக் காணச் சென்றார். நண்பன் அவனுக்குச் சில பொருட்களைக் கொடுத்தான். அவ்வூர்ச் சந்தையிலும் சில பொருட்களை வாங்கி மூட்டையாகக் கட்டித் தலையிற் சுமந்துகொண்டு வந்தார். அவருக்குக் கஷ்டமாக இருந்தது. மூத்த மகன் கணேசனைக் கூட்டிவந்திருக்கலாமென நினைத்தார். நினைத்த மாத்திரத்தே அவருக்கருகில் ஒரு சிறுவன் நின்றான். அவன்; ‘‘ஐயா, மிகவும் களைத்துவிட்டீர்கள். மூட்டையைத் தாருங்கள் நான் சிறிது தூரம் கொண்டுவருகிறேன்’’ என்றான்.

குடியானவன் அந்த மூட்டையைக் கொடுத்துவிட்டு; ‘‘நீ யார் தம்பி; உமது பெயர் என்ன? என்று கேட்டார்.

என்னைத் தெரியவில்லையா...? நான் உங்களது வீட்டுக்கு, உங்கள் மகன் கணேசனுடன் வருவேன். என்னை நீங்கள் ‘கணநாதா’ என்று அழைப்பீர்கள்’’ என்றான்.

குடியானவனுக்கு அவனைத் தெரியவில்லை. கணேசனுடன் கற்கும் பலர் வீட்டிற்கு வந்து போவார்கள். அவர்களில் ஒருவனாக அவன் இருப்பான் என நினைத்தார்.

வீட்டிற்குச் சிறிது தூரத்தில் அவன் மூட்டையைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டான்.

குடியானவன் வீட்டிற்கு வந்து கணேசனை அழைத்து விசாரித்தார். அவன் தனக்குக் கணநாதன் என்றொரு நண்பன் இல்லை என்றான். குடியானவன் தனது கஷ்டத்தைப் போக்க விநாயகரே உதவினார் என்று நினைத்தான்.

கடவுள் மீது பக்தியுள்ளவர்கள் அழைத்ததும் கடவுள் எந்த உருவில் வந்தாவது உதவுவார்.

பகவான் மஹாவிஷ்ணு பகவத்கீதையில் ஒன்பதாவது அத்தியாயமான ராஜவித்யாராஜகுஹ்யயோகம் என்ற அதிகாரத்தில் இவ்வாறு சொல்கிறார்.

“நான் எல்லா உயிர்களிடத்தும் சமமாக இருக்கிறேன். என்னைப் பக்தியோடு உபாசிப்பவர்கள் என்பால் உளர்; நானும் அவர்கள் பால் உள்ளேன்”.

“கேடு மிக உடையோனும் வேறு ஒன்றையும் எண்ணாது என்னைப் பூசிப்பானானால் அவனைச் சாது என்றே கருதுதல் வேண்டும். அவன் விரைவில் அறவானாவான். அதனால் அவன் நித்தியசாந்தியை அடைவான்”.

“கீழான பிறவிகளை எடுத்தோரும் என்னைச் சார்ந்திருந்து எனது நாமத்தை உச்சரிப்பதன் மூலம் பரகதியடைகின்றனர்”.

“மனதை என்னிடத்தில் வைத்து, என்னிடம் பக்தி பூண்டு, என்னைக் குறியாகக் கொண்டு உறுதியான மனத்துடன் என்னை வணங்கி எனது நாமத்தை உபாசிப்பதால், என்னையே அடைவாய்”

அனுமான் எந்த நேரமும் இராம நாமத்தை உச்சரித்ததால் தான் பலமும் வீரியமும் பெற்றார். அந்தப் பலத்தையே அவர் தன்னை வணங்குபவர்களுக்கும் கொடுக்கிறார். இதனால் தான் கடவுள்களை வணங்குவோர் அக்கடவுள்களின் நாமத்தைச் சொல்கிறார்கள். பெயரைச் சொல்லி அழைத்தவுடன் அழைப்பவர்களின் துயரத்தைப் போக்க பகவான் வருவார்.

அதனால் தான் பெயர்களை நாம் பிள்ளைகளுக்கு வைக்கும் போது அவதானமாக வைத்தல் வேண்டும். டிவாகர், டில்சான், டுல்மினி என்ற பெயர்கள் எண்சாத்திரத்திற்குப் பொருத்தமானது என்று நினைத்து வைத்தலாகாது. அருமையான இறை நாமங்களை எண்சாத்திரத்திற்கேற்பச் சூட்டுவதன் மூலம் இறை சிந்தனையை தமக்கும் பிறருக்கும் உண்டாக்கலாம்.

## ஊழ் என்று ஒன்று இருக்கா...? அதை நீக்க வழி என்ன...?

இந்து தர்மம் ஊழின்படி தான் மனித வாழ்வு நடைபெறுகிறது என்று சொல்கிறது. இதற்கு இதிகாச புராணங்கள், வேத உபநிடதங்கள் போன்றன சாட்சியாக உள்ளன. இதிகாச நாயகனான இராமன் கூட ஊழின் காரணமாகத் தான் காட்டுக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது.

காரணமின்றி எந்தக் காரியமும் நடைபெறமாட்டாது. வித்தின்றி மரம் முளைக்கமாட்டாது. மனித வாழ்வில் வித்தாக இருப்பது கர்மவினை.

ஒரு மனிதன் தனது விதியைத் தானே எழுதுகிறான். ஒவ்வொருவரும் அனுபவித்துக்கொண்டிருக்கும் துன்பங்களையும் இன்பங்களையும் தாமே உருவாக்குகிறார்கள். ஒவ்வொரு

வரினதும் செயல்களால் தான் அவை உருவாகின்றன. அதை நீக்கவும் அவர்களால் தான் முடியும். இதை விவேகானந்தர் இப்படிச் சொல்லுகிறார்; ‘‘நான் எதைப்படைத்தேனோ அதை என்னால் அழிக்க முடியும். பிறரால் படைக்கப்பட்ட ஒன்றை ஒருபோதும் என்னால் அழிக்க முடியாது. எனவே எழுந்து நில்; தைரியமாக இரு; வலிமையுடன் இரு; பொறுப்பு முழுவதையும் உன் தோள்மீதே சுமந்துகொள்; உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்துகொள்; உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கிறது’’.

‘‘உனது எதிர்காலத்தை நீயே உருவாக்கு. ஏற்கனவே நடந்து முடிந்ததைக் குறித்து வருந்தாதே. எல்லையற்ற எதிர்காலம் உன்முன்னால் விரிந்து பரந்து கிடக்கிறது. உன்னுடைய ஒவ்வொரு சொல்லும், சிந்தனையும், செயலும் அதற்கேற்ற பலனைத் தரும் வகையில் உன் மனதில் இடம்பெறும் என்பதை நினைவில் வைத்திருத்தல் வேண்டும். உனது தீய எண்ணங்கள் புலிகளைப் போல் உன்மீது பாய்வதற்கு தயாராக இருக்கின்றன. அதைப்போலவே உனது நல்ல எண்ணங்களும் செயல்களும் ஒரு நூறாயிரம் தேவதைகளின் ஆற்றலுடன் உன்னை எப்போதும் நிரந்தரமாகப் பாதுகாப்பதற்குத் தயாராக இருக்கின்றன என்னும் ஊக்கம் தரும் நம்பிக்கையும் இருக்கின்றது. இதை நீ எப்போதும் நினைவிற் கொள்ளவேண்டும்’’.

இதிலிருந்து ஒருவன் செய்யும் நன்மை தீமைகள் தான் விதியாக மாறி அவனுடன் சேர்ந்து செயற்பட்டு அவனது வாழ்வை நிர்ணயிக்கின்றன என்பது புலனாகிறது.

பகவத்கீதையில் கர்மயோகத்தில் மஹாவிஷ்ணு பின்வருமாறு கூறுகிறார்; “நித்திய கர்மத்தை நீ செய். செயலின்மையை விடச் செயல் சிறந்தது. செயலிலானுக்கு உடலைப் பேணுதல் கூட இயலாது”

“கர்மங்களால் உலகம் கட்டுண்டுள்ளது. அதனால் கர்மத்தைப் பற்றின்றிச் செய்”

“கர்மங்கள் மூலம் தேவர்களைப் பேணுங்கள். தேவர்கள் உங்களைப் பேணட்டும். பரஸப்பரம் பேணிப் பெரு நன்மை எய்துவீர். கர்மங்களாற் பேணப்பெற்ற தேவர்கள் நீங்கள் விரும்பிய போகங்களைத் தருவார்கள்”.

“தர்மம் செய்து எஞ்சியதை உண்ணும் நல்லோர் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகின்றனர். தங்கள் பொருட்டுச் சமைக்கும் பாவிகள் பாபத்தை உண்கின்றனர்”.

“தர்ம நெறிப்படி வாழாதவன் பாபவாழ்க்கை உடையவனாய், புலன்களிற் பொருந்தியவனாய், வீணே வாழ்கிறான்”

“பற்றறற்றுக் கர்மஞ் செய்பவன் ஆத்மாவில் திருப்தியடைந்து இன்பத்துடன் எந்நாளும் இருப்பான். அவனை வினைகள் தொடராது. அவன் கர்மம் செய்வதன் மூலம் எதையும் பெறுவதில்லை. கர்மம் செய்யாது எதையும் இழப்பதுமில்லை. ஏதாவது பொருளை நாடி உயிர்களை அவன் சார்ந்திருப்பதுமில்லை. ஆகையால் என்றும் பற்றற்றுப் பண்புடன் பெருவினையாற்றுக. பற்றற்றுக் கர்மம் செய்பவர்கள் என்னை வந்தடைவார்கள்”.

பற்றுக்களுடன் கர்மமாற்றுபவனால் நடுநிலைமையைக் கடைப்பிடிக்க முடியாது. அதனால் அவன் பக்கம் சார்ந்து கர்மமாற்றுகிறான். அதனால் ஆசை, அவா, சூது, வஞ்சகம், பொறாமை என்பன உண்டாகின்றன. இவை உண்டானால் துன்பங்கள் அதிகரிக்கும்.

வள்ளுவர் ஊழை எப்படி நீக்கலாமென்று திருக்குறளின் முதலாவது அத்தியாயத்திலேயே கூறுகிறார்.

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

எவ்வுயிர் மீதும் விருப்பு வெறுப்பில்லாத இறைவனின் திருவடிகளை நினைக்கின்றவர்களுக்கு ஒருபோதும் துன்பம் இல்லை.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இறைவனின் மகிமையை அறிந்து, அன்பு செலுத்துபவர்களைப் பிறவித்துயருக்குக் காரணமான நல்வினையும் தீவினையும் சேர்வதில்லை.

7. தனக்குஉவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

தனக்கு ஒப்புவமை இல்லாத இறைவனது பாதங்களைச் சேராதவர்களுக்கு மனக்கவலையை மாற்றிக் கொள்ள முடியாது.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

இறைவனின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்களால் மட்டும் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியும். மற்றவர்களால் கடக்க முடியாது.

அதைவிட வேறு பல அதிகாரங்களிலும் ஊழை விளக்கும் வழிவகைகளைக் கூறுகிறார்.

33. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்.

ஒவ்வொருவரும் தமக்கு இயன்ற வரையில், ஏற்ற இடங்களிலெல்லாம் அறச் செயல்களைச் செய்தல் வேண்டும்.

35. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொற்கள் ஆகிய நான்கையும் தவிர்த்து வாழ்தலே உண்மையான அறமாகும்.

39. அறத்தான் வருவதே இன்பம் ; மற் றெல்லாம்
புறத்த; புகழும் இல.

அறச் செயல்களால் வருவதுதான் இன்பம். அறமற்ற செயல்களால் துன்பம் வருவதோடு புகழும் கெடும்.

75. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

உலகில் இன்பமாக வாழ்கின்றவர்கள் அடையும் சிறப்பு, எல்லோரிடத்தும் அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று அறிஞர் கூறுவர்.

86. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்துஇருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

தன்னிடம் வந்த விருந்தினரைப் போற்றி உபசரித்து, இனிவரும் விருந்தினரைப் போற்றி உபசரிக்கக் காத்திருப்பவன் வானுலகத்தில் உள்ள தேவர்களுக்கு நல்ல விருந்தினனாவான்.

98. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

பிறருக்குத் துன்பத்தைக் கொடுக்கும் சிறுமையில் இருந்து நீங்கிய இனியசொற்கள், இம்மையிலும் மறுமையிலும் பேசுவோருக்கு இன்பம் தரும்.

109. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்று நன்று உள்ளக் கெடும்.

கொலை செய்வதற்கு சமமான தீமையை ஒருவர் எமக்குச் செய்தாலும், அவர் முன்பு செய்த ஒரு நன்மையை நினைத்துப் பார்த்தால் அத்தீமை பற்றிய துன்பம் மறைந்துவிடும்.

112. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

நடுவு நிலைமை உடையவனது செல்வம் அழியாமல் அவனுடைய பரம்பரையினரைச் சென்றடையும்.

122. காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்
அதனின்ஊஉங்கு இல்லை உயிர்க்கு.

அடக்கத்தை உயர்ந்த பொருளாகக் கருதி போற்றிக் காக்க வேண்டும். அந்த அடக்கத்தை விட மேம்பட்ட ஆக்கம் உயிர்களுக்கு இல்லை.

138. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்விற்கு வித்தாக அமையும். தீய ஒழுக்கம் எப்பொழுதும் துன்பத்தையே தரும்.

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.

பிறனுடைய மனைவியை இச்சையுடன் நோக்காத ஆண்மை ஆன்றோர்க்கு அறம் மட்டும் அன்று; நிறைந்த ஒழுக்கமும் ஆகும்.

157. திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறன்அல்ல செய்யாமை நன்று.

தீங்குகளைப் பிறர் தனக்குச் செய்தாலும், அதனால் அவர்களுக்கு வரும் துன்பத்திற்காக வருந்தி, அறம் அல்லாதவற்றை செய்யாமல் இருப்பதே நன்று.

167. அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

பொறாமை உடையவனைக் காணப் பொறுக்காத திருமகள், தன் தமக்கைக்கு அவனைக் காட்டிவிட்டு நீங்கிச்சென்று விடுவாள்.

171. நடுவுஇன்றி நன்பொருள் வெ.ஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

நடுவு நிலையை இல்லாமல் பிறரின் பொருளை ஒருவன் கவர நினைத்தால், அவனது குடி கெடுவதோடு குற்றமும் வந்து சேரும்.

213. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

பிறருக்கு உதவி செய்து வாழும் ஒப்புரவாகிய உயர்ந்த செயலைப் போன்ற நற்செயலை இவ்வுலகிலும் தேவர் உலகிலும் காணமுடியாது.

221. வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

வறியவர்களுக்குப் பொருட்களைக் கொடுப்பதே ஈகை. மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும்.

234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

ஒருவர் இந்த உலகில் நிலைத்து நிற்கும் புகழைப் பெற்றால் வானுலகம் தேவரைப் போற்றாமல் புகழ் பெற்றவரையே போற்றும்.

247. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகில் இன்பமான வாழ்க்கை இல்லாதது போல, உயிர்களிடத்தில் அருளில்லாதவர்களுக்கு அவ்வுலக வாழ்க்கை இல்லை.

253. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்.

கொலை செய்யும் ஆயுதங்களைக் கையில் வைத்திருப்பவனின் உள்ளத்தில் அருள் இல்லாதிருப்பதைப் போல, ஓர் உயிரின் உடம்பை விரும்பி உண்பவனின் உள்ளத்திலும் அருள் இராது.

மேற்கூறப்பட்ட குறள்களில் வள்ளுவன் கூறியமைக்கமைய வாழ்பவன் என்றும் துன்பமடையமாட்டான். விவேகானந்தர் கூறியதைப்போல அவனே தன் விதியை உருவாக்கி இன்பமுடன் வாழ்கிறான். ஒழுக்கமாக வாழ்பதுடன் கடவுளை நினைத்து வாழ்பவனுக்கு என்றுமே துன்பம் இராது.

350. பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பற்றில்லாதவனாகிய இறைவனின் மீது மட்டும் பற்றுக் கொள்ளல் வேண்டும், உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கு அப்பற்றைப் பற்றுதல் வேண்டும்.

வள்ளுவர் ஊழின் வலிமையைப் பற்றி ஊழ் என்ற அதிகாரத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.

371. ஆகுஊழால் தோன்றும் அசைவின்மை; கைப்பொருள்

போகுஊழால் தோன்றும் மடி.

ஒருவனது கைப்பொருள் வளர்வதற்கு காரணமான ஊழால் முயற்சி உண்டாகும்; கைப் பொருள் அழிவதற்குக் காரணமான ஊழால் சோம்பல் ஏற்படும்.

372. பேதைப் படுக்கும் இழவுஊழ்; அறிவகற்றும்
ஆகல்ஊழ் உற்றக் கடை.

பொருள் இழப்பதற்குக் காரணமான ஊழ், ஒருவனை அறிவற்றவனாக்கும்; பொருள் சேர்வதற்குக் காரணமான ஊழ் அவனை அறிவாளி யாக்கும்.

373. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

ஒருவன் நுட்பமான நூல்கள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்து பாண்டித்தியம் பெற்றாலும், ஊழிற்கு ஏற்றவாறு அவனுக்கு உள்ளதாகும் அறிவே மேற்பட்டுத் தோன்றும்.

374. இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

உலகத்தின் இயற்கை, ஊழின் காரணமாக இருவேறு வகைப்படும்; செல்வமுடையவர்களாக இருப்பது வேறு; அறிவுடையவர்களாக இருப்பது வேறு.

375. நல்லவை எல்லாம்அம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

செல்வத்தை தேடுகின்ற முயற்சிக்கு, ஊழால் நல்லவை யாவும் தீயவையாதலும் உண்டு; தீயவை நல்லவையாதலும் உண்டு.

376. பரியினும் ஆகாவாம் பால் அல்ல; உய்த்துச்
சொரியினும் போகா தம.

ஊழின் காரணத்தால் தமக்குரியவை அல்லாத பொருள்களை வருந்திக் காப்பாற்றினாலும் தங்காமல் போய்விடும்; தமக்குரியவையை கொண்டு போய்க் கொட்டினாலும் போகாது.

377. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

கோடி கோடியாகச் செல்வத்தைச் சேர்த்தாலும், ஊழ் வகுத்த படி தான் செல்வத்தை அனுபவிக்க முடியும்.

378. துறப்பார்மன் துப்புரவு வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

ஊழானது ஒருவனுக்குத் துன்பங்களைக் கொடுத்து வருத்தாமல் விடுமானால், அனுபவிக்கப் பொருளில்லாத வறியவர்கள் துறவிகளாவர்.

379. நன்றுஆம்கால் நல்லவாக் காண்பவர் அன்றுஆம்கால்
அல்லற் படுவது எவன்?.

ஊழ்வினையால் நல்லவை நடக்கும் போது மகிழ்கின்றவர், அதே ஊழ்வினையால் துன்பங்கள் வரும்போது கலங்குவது ஏனோ?.

380. ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

ஊழை விட மிக்க வலிமையுள்ளது பேறு எதுவும் இல்லை. ஊழை விலக்கும் பொருட்டு மாற்று வழியைத் தேடினாலும் அங்கும் ஊழே முன்வந்து நிற்கும்.

விதி மிக மிக வலியது. அதனால் தீயவற்றை எண்ணாது, தீயவற்றைச் செய்யாது வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால் ஊழை நீக்கலாம். இது இறைவனின் கூற்று.

கிரகமாற்றங்களால் தான் மனிதர்களுக்குத் துன்பங்களும் இன்பங்களும் உண்டாகின்றன என்று சோதிடர்கள் கூறுகிறார்கள். பிறந்த நேரப்படி தான் யாவும் நடைபெறும் என்கிறார்கள். நல்ல நேரத்திற் பிறப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

இயற்கை மாற்றமடைவதைப் போல வானில் உலவும் கிரகங்களும் மாற்றமடைகின்றன. இயற்கை மாற்றமடையும் போது குளிர், வெப்பம், மழை போன்றனவும் எரிமலை, பூகம்பம் போன்றனவும், கடல் கொந்தளிப்பு முதலியனவும் நடைபெறும். இதனால் நன்மைகளும் உண்டு. தீமைகளும் உண்டு. இயற்கை மாற்றமடைவதைத் தவிர்க்க முடியாதது போலக் கிரகங்களும் இடம்மாறுவதைத் தவிர்க்க முடியாது. இம் மாற்றத்தால் மனித வாழ்வில் இன்ப துன்பங்கள் உண்டாகின்றன.

கிரகங்கள் ஒன்பது. ஒருவாரத்தில் ஏழு நாட்கள் உள்ளன. இவ் ஏழு நாட்களும் ஏழு கிரகங்களுக்குரியவை. தோஷமுள்ளவர்கள் கிரகங்களுக்கென ஒதுக்கப்பட்ட நாட்களில் விரதமிருந்து அர்ச்சனை செய்து அவ்வக் கிரகங்களைப் பிரிதி செய்தல் வேண்டும்.

ஞாயிற்றுக் கிழமை சூரியனுக்கும்
திங்கட்கிழமை சந்திரனுக்கும்.
செவ்வாய்க்கிழமை செவ்வாய்க்கும்
புதன்கிழமை புதனுக்கும்
வியாழக்கிழமை வியாழனுக்கும்
வெள்ளிக்கிழமை சுக்கிரனுக்கும்
சனிக்கிழமை சனிக்கும் உரியது
இராகு, கேது ஆகிய இரண்டு கிரகங்களுக்கும்
உருவம் இல்லை அவை நிழற்கிரகங்கள்.

ஒன்பது கிரகங்களும் இருபத்தேழு நட்சத்திரங்களை அடக்கிய பன்னிரு இராசிகளிற் பயணம் செய்வர். சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி முதலிய ஏழு கிரகங்களும் இராசிச் சக்கரத்தில், இடமிருந்து வலமாகவும், சாயாக் கிரகங்களான ராகுவும் கேதுவும் வலமிருந்து இடமாகவும் செல்வார்கள். இராகுவிற்கு ஏழாவது வீட்டில், சரியாக 180 பாகை துாரத்தில் கேது எப்போதும் இருப்பார்.

சூரியன் ஒரு இராசியை ஒரு மாதத்திற் கடப்பார்.

சந்திரன் ஒரு இராசியை இரண்டே கால் நாளிற் கடப்பார்.

செவ்வாய் ஒரு இராசியை ஒன்றரை மாதத்திற் கடப்பார்.

புதன் ஒரு இராசியை ஒரு மாதத்திற் கடப்பார்.

குரு ஒரு இராசியை ஒரு வருடத்திற் கடப்பார்.

சுக்கிரன் ஒரு இராசியை ஒரு மாதத்திற் கடப்பார்.

சனி ஒரு இராசியை இரண்டரை வருடத்திற் கடப்பார்.

இராகு, கேது இருவரும் ஒரு இராசியை ஒன்றரை வருடத்திற் கடப்பார்கள். இது இயற்கையின் நியதி.

சூரியன் சித்திரை முதலாம் நாள் மேஷராசியில் பிரவேசிப்பார். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு இராசியாகக் கடந்து பங்குனி மாதம் முதலாம் நாளன்று மீன இராசிக்குள்ப் பிரவேசிப்பார். இதன்படி சூரியபகவான் ஒவ்வொரு இராசியையும் கடந்து செல்வார்.

இந்த இயற்கையான மாற்றத்தையிட்டு யாரும் கவலைகொள்ளத் தேவையில்லை. பிறப்பென்பது நிச்சயிக்கபப்ட்டது. அது குறித்த நேரம் நிகழும். நல்ல நேரம் பார்த்துப் பிறப்பை உண்டாக்க முடியாது. சிலர்

எண்சோதிடப்படி உரிய காலத்திற்கு முன் அறுவைச்சிகிச்சை செய்து சிசுவை வெளியே எடுக்கின்றனர்.

கீதை சொல்லுவது போல எல்லாம் முடிந்த காரியம்.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கின்றது.

எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.

ஒரு பிறப்பில் ஞானத்தை அடையாத ஞானப்பிரதிஷ்டன் ஞானத்தை அடைய மீண்டும் பிறப்பான்.

ஒரு பிறப்பில் கர்மத்தை முடிக்காத ஆத்மாக்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்துக் கொண்டேயிருக்கும்.

“பரம பக்குவப்பட்ட மகாத்மாக்கள் என்னை அடைந்து, துன்பத்திற்கு இருப்பிடமும் நிலையற்றதுமாகிய மறுபிறப்பை எடுப்பதில்லை”.

இப்படி பகவான் மஹாவிஷ்ணு பகவத்கீதையில் சொல்கிறார். அவர் எப்படியான ஆத்மாக்கள் மீண்டும் பிறப்பதில்லை என்றும், அத்தகைய ஆத்மாக்கள் உடலை விட்டுச் செல்லும் காலங்கள் எவையென்றும் கூறுகிறார்.

பகவத்கீதையில் எட்டாம் அதிகாரமான அ்‘ரப்ரஹ்ம யோகத்தின் இருபத்து நான்காவது சுலோகம் இப்படிச் சொல்கிறது.

“தீ, ஒளி, பகல், சுக்கிலபட்சம், உத்தராயணத்தின் ஆறு மாதங்கள் - இவற்றில் உடலை நீத்துப் போகின்ற பிரம்ம ஞானிகள் பிரம்மத்தை அடைகின்றனர்”.

இருபத்தைந்தாவது சுலோகம் இப்படிச் சொல்கின்றது.

“புகை, இரவு, கிருஷ்ணபட்சம், தட்சிணாயத்தின் ஆறு மாதங்கள் - இவைகளில் உடலை நீத்துப் போகின்ற யோகிகள் சந்திரனது ஒளியைப் பெற்றிருந்து மறுபிறவியடைகிறார்கள்”.

இருபத்தாறாவது சுலோகம் இப்படிச் சொல்கிறது.

“ஒளியும், இருளும் ஆகிய இவ்விரண்டு வழிகள் இயற்கையில் என்றென்றும் உள்ளவை என்று எண்ணப்படுகின்றன. ஒன்று பிறவாமைக்குப் போவது; மற்றொன்று பிறப்பைத் தருவது”.

இதன்படி அக்கினி, ஜோதி நிறைந்த வேளைகளில் மரணமடைபவன் மீண்டும் பிறப்பதில்லை. இரவு, புகை நிறைந்த வேளைகளில் இறப்பவன் கீழ்மையடைகின்றான். இவ்விரு மரணங்களும் இயற்கையான சூழ்நிலையில் நடைபெறல் வேண்டும். வளர்பிறையில் வரும் கிருஷ்ண பட்சம் மேன்மைக்குரியது. தேபிறையில் வரும் கிருஷ்ண பட்சம் கீழ்மையானது. இதன்படி நல்ல நாளில் மரணமடைபவன் மோட்சத்தை அடைவான்.

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி என்ற முதல் ஆறு மாதங்களும் உத்தராயண காலமாகும். சூரியன் இம்மாதங்களில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கிச் செல்வான். மிகவும் புண்ணிய காலமாக இது கருதப்படுகிறது. இக்காலத்தில் இறக்கும் யோகிகள் மறுபிறப்படைய மாட்டார்கள் என்று மஹாவிஷ்ணு பகவத்கீதையிற் கூறுகிறார்.

ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய ஆறு மாதங்களும் தட்சிணாய காலமாகும். இக்காலத்தில் சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்வான்.

ஒவ்வொருவரும் செய்யும் தர்மத்திற்கேற்பவே பிறப்புக்கள் உண்டாகின்றன. பிறக்கின்ற ஒருவனுக்கு இயல்பாகவே கிரகநிலை கணிக்கப்படும். இதற்கமைய நவக்கிரகங்கள் மாற்றமடையும். எந்தக்கிரகம் எந்த வீட்டில் இருந்தாலும் அவரவர் செய்த கர்மவினைக்கேற்பவே பலன்கள் கிடைக்கும். பாபம் செய்தவனுக்கு வியாழபகவான் பதினொராவது வீட்டிலிருந்தாலும் அதற்குரிய பலன்களைக் கொடுக்கமாட்டார். புண்ணியம் செய்தவனுக்குக் குருபகவான் அட்டமத்தில் இருந்தாலும் தீமை செய்யமாட்டார்.

பகவத்கீதையில் கண்ணன் சொல்கிறான்; "பார்த்தா வேறு எண்ணமின்றி யார் என்னை நெடிது இடையறாது வணங்குகிறானோ, அந்த ஒருநிலைப்பட்ட யோகிக்கு நான் இலகுவில் அகப்படுவேன்".

மகாவிஷ்ணுவின், சிவனின், விநாயகரின் சிந்தனையில் இருப்பவனைக் கிரகங்கள் மட்டுமல்ல பேய் பிசாசுகள் கூட அண்டாது.

ஒருமுறை சிவனுக்குச் சனிதோஷம் ஏற்பட்டது. சிவன் சனீஸ்வரரின் பிடிக்குள் அகப்படாது இருப்பதற்காகப் பசுவின் சாணத்துள் இருந்தாராம். இப்படி ஒரு புராணக்கதையுண்டு.

எல்லாத் தெய்வங்களும், எல்லாத் தேவர்களும், எல்லா முனிவர்களும், சகல புண்ணிய தீர்த்தங்களும் அடங்கப்பெற்ற பசுவை வளர்ப்போரை எதுவும் தீண்டாது. அதன் சாணத்திலிருந்து நீறு தயாரித்துத் தினமும் மூன்றுமுறை தரிப்போரையும் எவையும் தீண்டாது.

எனவே நல்லதைச் செய்யுங்கள், நல்லபடி வாழுங்கள், கடவுளை வணங்குங்கள். உங்களை எந்தக் கிரக மாற்றமும்

எதுவும் செய்யாது. நீறணிந்து, சம்பந்தப் பெருமானின் கோளறு பதிகத்தைப் படியுங்கள். முடியுமானால் சனிக்கிழமைகளில் விரதமிருந்து காகத்திற்கு உணவு வைத்து எள்ளெண்ணை எரியுங்கள். துன்பங்கள் யாவும் இன்பங்களாகும்.

“ஒரு பிறப்பில் நல்லதைச் செய்தவன் நல்ல நேரத்தில் இறப்பான். அவன் பிறக்கவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டால் நல்ல நேரத்தில் நல்ல குடும்பத்தில் வசதியான பெற்றோரின் குழந்தையாகப் பிறந்து சகல இன்பங்களையும் அனுபவிப்பான்” இப்படி நான் சொல்லவில்லை. பகவத்கீதையில் பகவான் மகாவிஷ்ணு சொல்கிறார்.

கனவுகள் உண்மையானவையா? அவை எப்படி மனத்திரைக்கு வருகின்றன.

பஞ்சாகத்தில் கனவுகளைப் பற்றியும் அதன் பலன்களைப் பற்றியும் குறிப்புக்கள் உண்டு. நாள், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்ற ஐந்தைப் பற்றியும் விபரமாகக் குறிப்பிடுவது பஞ்சாங்கம். இராகு காலம், எமகண்டம், திதிகள், அமாவாசை, கரிநாட்கள், இராசிகள், நட்சத்திரங்கள், திருமணப் பொருத்தம், நல்ல நாட்கள் போன்ற பல விஷயங்களைப் பஞ்சாங்கம் கூறுகிறது. அது கூறியதை

நம்பி அதன்படி நடக்கும் மனிதன் கனவுகள் பற்றிப் பஞ்சாங்கம் கூறுவதையும் நம்பித்தானே ஆகவேண்டும்.

வாக்கிய பஞ்சாங்கம் சூரிய சந்திரர், மலை, கடல், வாவி, ஆறு, குளம், பூஞ்சோலை, தேவாலயம், அரண்மனை, தேவர், அரசர், குரு, பிராமணர், தந்தை, தாய், பிள்ளை, வெள்ளையாடை, வெண்பூமாலை அணிந்தோர், வேசி, பட்டத்துயானை, குதிரை, தேர், நிறைகுடம், தாமரை, அன்னம், மயில், கோழி, கொக்கு, வெண்பாம்பு, தேள், மீன், இறைச்சி, மலம், இரத்தம், சோறு, தயிர், நெல், உப்பு, மஞ்சள், தேங்காய், எலுமிச்சம்பழம், நீலோற்பலம் முதலியவற்றைக் கனவிற் கண்டால் செல்வம், வாழ்வு, சுகம் உண்டாகும் என்று கூறுகிறது.

சூரிய சந்திரர், நட்சத்திரங்கள் மாறுபாடாகத் தோன்றல், நீர் வற்றிய ஆறு, குளம், வாவி போன்றன, பிசாசு, பூதம், கரிய வஸ்த்திரம் அணிந்தோர், அமங்கலி, கொலைஞர், சண்டாளர், நிர்வாணமாக நிற்போர், காவி வஸ்த்திரம் அணிந்தோர், யானை, புலி, கரடி, நரி, குரங்கு, பன்றி, முதலை, ஒட்டகம், எருமை, பருந்து, குரக்கன், சாமை, எள்ளு, எண்ணெய், பலாப்பழம், மயிர் களைதல், பல் விழல், மரம் முறிதல், விவாகம் நடைபெறல், தெற்றே செல்லல் போன்றவற்றைக் கனவில் கண்டால் வறுமை, துன்பம், நோய், மரண பயம் உண்டாகும் என்றும் வாக்கிய பஞ்சாங்கம் கூறுகிறது.

கவலை, நினைவுகள், பயம், அச்சம், நம்பிக்கையின்மை போன்றவையும், மகிழ்ச்சி, நம்பிக்கை, கடவுள் பக்தி என்பவையும் கனவுகளை உண்டாக்கும்.

தீய செயல்களைச் செய்பவர்கள், அடுத்தரைக் கெடுக்க நினைப்பவர்கள், திருடர்கள், பொறாமைப்படுவோர், ஒழுக்க மில்லாதவர்கள், பிறரின் மனைவியை விரும்பி அவளது கடைக்கண் பார்வைக்காக அலைவோர், பொறுமை இல்லாதவர்கள், அழுக்கான மனத்தை உடையவர்கள், அஞ்சாமல் தீய செயல்களைச் செய்வோர், புறங்கூறுவோர், பயனில்லாத வார்த்தைகளைப் பேசுவோர், தீமை செய்வதையே வழக்கமாகக் கொண்டோர், அயலவர்கள் துன்பப்பட்டபோதும் உதவாதோர், புகழுக்காகக் காரியமாற்றுவோர், அருள் இல்லாதோர், புலால் உண்போர், போலியான தவவாழ்வு வாழ்வோர், பொய் பேசுவோர், கோபங்கொள்வோர், கொலைகளைச் செய்வோர், எப்போதும் மனப்போராட்டத்துடன் அமைதியின்றியே வாழ்வார்.

ஒருவன் எண்ணுவது தான் செயலாக மாறும். செயல்கள் தான் கனவுகளாக வரும். எப்பொழுதும் மற்றவர்களைக் கெடுக்க வேண்டும் என்று எண்ணுபவர்களுக்கு நல்ல எண்ணம் ஒரு போதும் வரமாட்டாது. அவர்கள் மற்றவர்களை எப்படிக் கெடுக்கலாமென்றே நினைத்துக் கொண்டிருப்பார்கள். கடவுளை வணங்கும் போது கூட அவர்கள் தமது எதிரிகளை கடவுள் தண்டிக்க வேண்டுமென்று பிரார்த்திப்பார்கள். எதிரிகள் எல்லோரும் அழிய வேண்டுமென்று நேர்த்தியும் வைப்பார்கள். அப்படியானவர்களின் மனதில் எப்படி நல்ல கனவுகள் தோன்றும். தீயவற்றை நினைப்பவன் தீயதையே கனவாகக் காண்பான். ‘வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை’ என்பதைப்போல நல்ல மனங்கொண்டவர்களுக்குக் கெட்ட நினைவுகள் இருக்காது.

விவேகானந்தர் சிறந்த மனிதனைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்; ‘‘நமது வாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மையுடையதாகவும் இருந்தால் மட்டுந்தான் உலகமும் சிறப்பும், தூய்மையும் பெற்றதாக இருக்க முடியும். அது காரியம்; நாம் அதை விளைவிக்கும் காரணம். எனவே நம்மை நாம் தூய்மைப்படுத்திக்கொள்வோமாக. நம்மை நாம் பரிபூரணர்களாக்கிக் கொள்வோமாக’’

‘‘நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பிறகு சூட்சுமத்தன்மையை அடைகிறது. பின்பு அது வித்து வடிவத்தைப் பெற்று மறைந்து நமது சூட்சும சரீரத்தில் வாழ்கிறது. மீண்டும் சிறிது காலத்திற்குப் பிறகு அது வெளிப்பட்டு வந்து தனக்குரிய பலன்களைத் தருகிறது. இந்தப் பலன்களே மனிதனுடைய வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. இவ்விதம் மனிதன் தனது வாழ்க்கையைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். தனக்குத் தானே அமைத்துக் கொள்ளும் விதிகளைத் தவிர வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல’’.

மேற்கூறிய வாக்கியங்களின் மூலம் சுவாமி விவேகானந்தர் மனிதனின் மனவியல்புகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார். எண்ணங்கள் தான் மனிதனைச் செயற்பட வைக்கின்றன. எந்த நேரமும் மனம் இயங்கிக்கொண்டே இருக்கும். அதனால் அது செயற்பட்டுக் கொண்டிருக்கும். உறக்கத்திலும் மனித மனம் விழித்திருந்து எண்ணிக்கொண்டிருக்கிறது. அந்த எண்ணங்கள் தான் கனவாக வருகின்றன.

கனவுகள் உண்மையானவை. மனதிலுள்ள எண்ணங்களின் வெளிப்பாடுகள் தான் கனவுகள். நல்லதை நினைத்தால் நல்ல கனவுகள் வந்து வாழ்வை வளப்படுத்தும். தீயதை நினைத்தால் தீய கனவுகள் தோன்றி மனதைச் சஞ்சலப்படுத்தும். இதனால் வாழ்வு நாசமாகும். நல்லதைச் செய்து நல்லபடி வாழ்ந்தால் காணும் கனவுகள் யாவும் பலித்து இன்பத்தைத் தந்து மனதை மேம்படுத்தி மகிழ்வுடன் வாழச் செய்யும். இல்லாவிட்டால் தீய கனவுகள் தோன்றி அச்சுறுத்தி இன்பவாழ்வைக் கெடுக்கும்.

உலகில் துன்பம் இல்லாது வாழ்வது எப்படி?

4. ‘‘வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல’’.

எவ்வுயிர் மீதும் விருப்பு வெறுப்பில்லாத இறைவனின் திருவடிகளை நினைக்கின்றவர்களுக்கு ஒருபோதும் துன்பம் இல்லை.

5. ‘‘இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு’’.

இறைவனின் மகிமையை அறிந்து, அன்பு செலுத்துபவர்களைப் பிறவித்துயருக்குக் காரணமான நல்வினையும் தீவினையும் சேர்வதில்லை.

7. ‘‘தனக்குஉவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது’’.

தனக்கு ஒப்புவமை இல்லாத இறைவனது பாதங்களைச் சேராதவர்களுக்கு மனக்கவலையை மாற்றிக் கொள்ள முடியாது

10. “பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்”.

இறைவனின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்களால் மட்டும் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியும். மற்றவர்களால் கடக்க முடியாது.

கடவுளின் திருவடிகளை உறுதியாக நினைக்காதவர்கள், அவரின் திருவடிகளை விரும்பிப் போற்றாதவர்கள், கடவுளின் பாதங்களை அடையாதவர்கள் என்றும் துன்பத்துடன் வாழ்வார்கள் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

இதையே சைவசித்தாந்தமும் கூறுகின்றது.

ஆசை தான் துன்பங்களுக்குக் காரணம். ஆசைகளால் தான் மனிதன் ஆயிரமாயிரங் குற்றங்களைச் செய்கின்றான். ஆசையற்ற மனம் ஆண்டவனின் இருப்பிடம்.

3. “மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்”.

அடியார்களின் மலர் போன்ற உள்ளத்தில் வீற்றிருக்கும் இறைவனின் திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர்கள் இன்ப உலகில் நிலைத்து வாழ்வர்.

361. “அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்

தவாஅப் பிறப்புஈனும் வித்து''.

எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் நீங்காமல் வருகின்ற பிறவித் துன்பத்தை உண்டாக்கும் வித்து அவா என்று கூறுவர்.

இதயக்கமலத்தில் இறைவன் குடிபுகுந்தால் துன்பங்கள் ஒருவனை நெருங்காது. இதை விபுலானந்தர்; ''உள்ளக்கமவமடி உத்தமனார் வேண்டுவது'' என்று கூறியுள்ளார்.

துன்பங்கள் வரப்பல காரணங்கள் உண்டு.

கானல் நீர் போலத் தென்படும் உலகை நிஜம் என்று நம்புவதால் துன்பங்கள் உண்டாகும்.

கடவுளை நம்பாது மனிதர்களின் தன்மைகளை நம்புவதால் துன்பங்கள் உண்டாகும். மரணத்திற்கு அஞ்சுவதால் துன்பங்கள் உண்டாகும்.

எனக்கெனக் கடவுளால் கொடுக்கப்படவுள்ளன யாவும் என்னை வந்தடையும். எனக்குக் கிடைக்காத எவையும் என்னை வந்தடையமாட்டாது என்று நம்புவர்களுக்கு ஒரு போதும் துன்பம் வராது.

359. ''சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்

சார்தரா சார்தரும் நோய''.

எல்லாப் பொருள்களுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து, பற்றற்று வாழ்ந்தால், சார்வதற்குரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையாது.

376. ''பரியினும் ஆகாவாம் பால் அல்ல; உய்த்துச்

சொரியினும் போகா தம''.

ஊழின் காரணத்தால் தமக்குரியவை அல்லாத பொருள்களை வருந்திக் காப்பாற்றினாலும் தங்காமல் போய்விடும்; தமக்குரியவையை கொண்டு போய்க் கொட்டினாலும் போகாது.

377. "வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி

தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது".

கோடி கோடியாகச் செல்வத்தைச் சேர்த்தாலும், ஊழ் வகுத்த படி தான் செல்வத்தை அனுபவிக்க முடியும்.

379. "நன்றுஆம்கால் நல்லவாக் காண்பவர் அன்றுஆம்கால்

அல்லற் படுவது எவன்?".

ஊழ்வினையால் நல்லவை நடக்கும் போது மகிழ்கின்றவர், அதே ஊழ்வினையால் துன்பங்கள் வரும்போது கலங்குவது ஏனோ?.

380. "ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று

சூழினும் தான்முந் துறும்."

ஊழை விட மிக்க வலிமையுள்ளது பேறு எதுவும் இல்லை. ஊழை விலக்கும் பொருட்டு மாற்று வழியைத் தேடினாலும் அங்கும் ஊழே முன்வந்து நிற்கும்.

உலக நடைமுறையை நன்கு உணர்ந்த திருவள்ளுவர் மனிதனின் ஊழ் பற்றி மேற்கண்ட பாக்கள் மூலம் கூறியுள்ளார். இதை விட விளக்கமாக யாரும் கூறியதில்லை.

பிறருக்குத் தீமை செய்பவன் தனக்குத்தானே தீமையைச் செய்கிறான் என்று உணர்ந்து கொள்பவனுக்கு ஒரு போதும் துன்பம் வரமாட்டாது.

204. “மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்

அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு”.

பிறருக்குக் கேடு விளைவிக்கும் தீய செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக் கூடாது. எண்ணினால் எண்ணுபவனுக்கு அறம் கேட்டை உண்டாக்கும்.

80. “தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால

தன்னை அடல்வேண்டா தான்”.

தீமைகள் வராது இன்பமாக வாழ விரும்புகின்றவன், தீய செயல்களைத் தான் பிறருக்குச் செய்யாதிருத்தல் வேண்டும்.

தன்னைப் போல பிறரையும் மதிப்பவனுக்குத் துன்பம் வரமாட்டாது.

என்னை விட உயர்ந்தவர்கள் யாரும் இல்லை; நான் தான் எல்லாம் அறிந்தவன் என்று நினைக்காதவனுக்குத்துன்பம் வராது.

விட்டுக்கொடுத்து வாழ்பவனுக்குத் துன்பம் வரமாட்டாது.

நம்பியவனை ஏமாற்றாதவனுக்குத் துன்பம் வராது.

வள்ளுவன் கூறுவது போலப் பிறருக்குத் தீங்கு செய்யாதவனுக்கு ஒருபோதும் துன்பங்கள் வராது.

புராணங்கள் மனித வாழ்வின் கருவூலங்கள் என்று கூறப்படுகின்றன. வியாசமுனிவர் இயற்றிய பதிணெண்புராணங்களைவிடப் பெரிய புராணம் எந்த வகையிற் சிறந்தது?.

பதிணெண்புராணங்களை இயற்றியவர் வியாசமுனிவர்.

“பரோபகாராய புண்ணியாய, பாபாய பரபீடனம்”

“பரோபகாரார் தம் இதம் சரீரம்” என்று வடமொழியில் கூறியதைச் சேக்கிழார் தமிழில் கூறியுள்ளார்.

வியாசர் இயற்றிய பதிணெண் புராணங்களும் கடவுள் அடியார்களுக்காக எந்தவிதமான உதவிகளையும் செய்வாரென்றும், மனித உடல் படைக்கப்பட்டது நலிந்தவர்களுக்குச் சேவைசெய்வதற்காகவென்றும் கூறுகிறார்.

பரோபகாரம் என்றால்; “எந்த நன்மைகளையும் எதிர்பாராது உதவி செய்தல்” என்று பொருள்படும். விருப்பு வெறுப்பில்லாத பரோபகாரியான இறைவனை, விருப்பு வெறுப்பில்லாமல் உதவி செய்வோர் அடைவார்கள் என்று வியாசர் கூறுவதையே பெரியபுராணத்தில் சேக்கிழார் கூறுகிறார்.

இறைவன் அன்னியன் அல்ல; உன்னை நேசிப்பவன்; உனது நலனில் அக்கறை உள்ளவன்; உயிர்கள் துன்பத்தால் துடித்தால் ஓடோடி வந்து அவர்கள்படும் துன்பத்தைத் தீர்ப்பவன் என்ற கோட்பாட்டைப் புராணங்கள்

எடுத்தியம்புகின்றன. அதே வகையில் பெரியபுராணம் சிவனடியார்களது வரலாற்றை சுவையாகச் சொல்கிறது. வேத உபநிடதங்களுக்கு இதிகாச புராணங்கள் கதை வடிவம் கொடுப்பதைப் போலப் பெரியபுராணமும் வேத உபநிடதக் கருத்துக்களைக் கதைவடிவில் கூறுகிறது.

பெரியபுராணம் மனித வாழ்வு; மனிதனின் ஆசாபாசங்கள்; அவனது தீய நோக்கங்கள்; அவனது உயர்ந்த சிந்தனைகள்; அவன் வாழும் விதம்; தமிழரது கலை, கலாச்சாரம், உணவு முறை போன்றவற்றைக் கூறுகின்றது. தர்மத்தைக் கடைப்பிடிப்பதால் உண்டாகும் நன்மைகள், அதர்மத்தால் உண்டாகும் தீமைகள் பற்றி விரிவாகக் கூறுகிறது. ஆத்ம ஈடேற்றத்தைப் பற்றி விளக்குகின்றது. இறைவனின் இயல்பைப் பற்றியும் கூறுகின்றது.

பதினெண் புராணங்களில் அசுரர்கள் தமது புஜபலத்தாலும், வரத்தின் மகிமையாலும் பல தீமைகளைச் செய்கிறார்கள். ஆனால் பெரியபுராணத்தில் நாயன்மார்கள் தமது பக்தியின் பலத்தால் மனிதர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறார்கள். பெரியபுராணத்தில் இறைவன் அடியவர்களுக்கு எளியவனாகக் காட்சி தந்து பழகுகிறான். மனிதனின் ஆசாபாசங்களுடன் ஒன்றிக்கிறான். உயிர்களை விட்டு ஒருபோதும் நான் நீங்கமாட்டேன் என்ற தன்மையை உணர்த்துகின்றான்.

பெரிணபுராணம் தமிழரது நாகரிகத்தின் பெட்டகம். தமிழரது தெய்வத்தின் இயல்பை மிகவிரிவாகக் கூறும் வேதம். அது திருக்குறளுடன் மிகவும்

பொருந்தியிருப்பதைக் காணமுடிகின்றது. திருக்குறளில் கூறப்பட்ட வாழ்க்கை முறையைப் பெரியபுராணத்தில் நாம் காணலாம்.

பதிணெண்புராணங்களில் இல்லாத பல சிறப்புக்கள் பெரியபுராணத்தில் உண்டு. சிறந்த ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்ந்து பற்றுக்களைத் துறந்தவர்களது பெருமையையும், அறத்தின் சிறப்பையும் பெரியபுராணம் விதந்துகூறுகின்றது.

இல்வாழ்வைப் பற்றியும் இல்வாழ்வானின் கடமையைப் பற்றியும் அவனது சிறப்பைப் பற்றியும் பெரியபுராணம் கூறுகிறது.

வாழ்க்கைத்துணையைப் பற்றி மிகவும் சிறப்பாகக் கூறுகின்றது. இதில் கூறப்பட்டவை திருக்குறளிலும் கூறப்படுகின்றன.

53. "இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?"

நற்குணங்களையுடைய இல்லாள் வாழும் வீட்டில் இல்லாதவையென எதுவும் இருக்கமாட்டாது. நற்குணங்கள் அவளிடம் இல்லையாயின் அவ்வீட்டில் எதுவும் இராது.

நன்மக்கட்பேறு பற்றியும், மக்கள் இல்லாவிட்டால் உண்டாகும் தீமைகள் பற்றியும் பெரியபுராணம் கூறுகின்றது.

அன்பாக வாழ்ந்து அடியார்களைப் போற்றி அவர்களுக்குச் சேவை செய்து இனிய வார்த்தைகள் கூறி உபசரிக்கும் படி பெரியபுராணம் கூறுகின்றது.

நன்றிமறவாமை, நடுவுநிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கமுடைமை பற்றி மிகவும் விரிவாகவும் சிறப்பாகவும் பெரியபுராணம் கூறுகிறது.

ஈகை பற்றியும் பெரியபுராணம் சிறப்பாகக் கூறுகின்றது. புகழுடன் வாழும் வழிபற்றிக் கூறுகிறது.

கொல்லாமை, புலால் மறுத்தல் பற்றியும் பெரியபுராணம் கூறுகின்றது.

தவம் செய்வது பற்றியும், துறவு பற்றியும் கூறுகிறது. சைவசித்தாந்தம் கூறும் நால்வகைத் தர்மங்களையும் கூறுகிறது.

இதைவிடத் துறவு, மெய் உணர்தல், அவா அறுத்தல் பற்றியும் ஊழ்பற்றியும் பெரிய புராணம் சிறப்பாகக் கூறுமளவிற்கு மற்றய புராணங்கள் கூறவில்லை.

பெரியபுராணம் சைவசித்தாந்தத்தைப் பற்றி மட்டும் கூறுகிறது. பதிணெண் புராணங்கள் சைவம் வைணவம், சாக்தம், காணபத்தியம் பற்றிக் கூறுகின்றன.

பெரியபுராணத்தில் கூறப்பட்ட நாயன்மார்களது சரித்திரம் திருக்குறளுக்குப் பொருந்துவதாக உள்ளமையால் பெரிய புராண வாழ்க்கை உலகிற்கு ஏற்றதாக அமைகிறது.

3. “மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார்”.

அடியார்களின் மலர் போன்ற உள்ளத்தில் வீற்றிருக்கும் இறைவனின் திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர்கள் இன்ப உலகில் நிலைத்து வாழ்வர்.

9. “கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை”.

கேட்காத செவி, பார்க்காத கண் என்பன போல் எண்குணங்களை உடைய இறைவனை வணங்காத தலையும் பயனற்றதாகும்.

24. “உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்

வரன்எனும் வைப்பிற்குஓர் வித்து”.

மனவலிமையால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்குபவனே முத்திக்கு விதை போன்றவன்.

35. “அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்”.

பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொற்கள் ஆகிய நான்கையும் தவிர்த்து வாழ்தலே உண்மையான அறமாகும்.

43. “தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு

ஐம்புலத்தாறு ஓம்பல் தலை''.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர் என்பவர்களுடன் தன்னையும் போற்றுதல் இல்வாழ்வானது தலையாய கடனாகும்.

60. ''மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்

நன்கலம் நன்மக்கட் பேறு''.

மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும் அதன் பேறாக நல்ல மக்களைப் பெறுதலே நல்லணிகலம் என்றும் பெரியோர் கூறுவர்.

62. ''எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்

பண்புடை மக்கள் பெறின்''.

பழியில்லாத நல்ல பண்புடைய மக்களைப் பெற்றோரை ஏழு பிறவிகளிலும் தீவினைகள் எவையும் சென்று சேராது.

72. ''அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு''.

அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருட்களையும், தம்பொருள் என உரிமை கொண்டாடுவர். அன்புள்ளவர்கள் தமது உடலால் பிறருக்கு சேவை செய்து வாழ்வர். (உடலுறுப்புக்களையும் தானமாக வழங்குவர்.

81. ''இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்ஓம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு''.

பொருள்களைத் தேடிக்காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பேணி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

126. ''ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்

எழுமையும் ஏமாப்பு உடைத்து''.

ஒருவன் தனது ஐம்பொறிகளையும் ஆமை தனது உறுப்புக்களை ஒடுக்குவது போல ஒடுக்கி வாழ்ந்தானேயானால் அஃது அவனது ஏழேழு பிறப்பிலும் காப்பாகும் சிறப்புடையது.

213. ''புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே

ஒப்புரவின் நல்ல பிற''.

பிறருக்கு உதவி செய்து வாழும் ஒப்புரவாகிய உயர்ந்த செயலைப் போன்ற நற்செயலை இவ்வுலகிலும் தேவர் உலகிலும் காணமுடியாது.

244. ''மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு இல்லென்ப

தன்உயிர் அஞ்சும் வினை''.

உலகில் வாழும் உயிர்களைக் காப்பாற்றி வாழும் அருளாளனுக்குத் தன்னுடைய உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற இழிவான நிலை இல்லை.

259. ''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்

உயிர்செகுத்து உண்ணாமை நன்று''.

நெய் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதை விட, ஓர் உயிரைக் கொன்று அதன் உடம்பைத் தின்னாமல் இருப்பது நல்லது.

264. ‘‘ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்

எண்ணின் தவத்தான் வரும்’’.

தீமை செய்வோரை அடக்குதல், நன்மை செய்வோரை உயர்த்துதல் ஆகிய இரண்டையும் தவ வலிமை படைத்தவர்களால் செய்ய முடியும்.

300. ‘‘யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்

வாய்மையின் நல்ல பிற’’.

யாம் உண்மையாகக் கண்ட பொருட்களுள் வாய்மையை விட உயர்ந்த பொருள் வேறு எதுவும் இல்லை.

321. ‘‘அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்

பிறவினை எல்லாம் தரும்’’.

அறமாகிய செயல் எதுவென்றால் ஓர் உயிரையும் கொல்லாமை ஆகும். கொல்லுதல் அறமில்லாத எல்லாச் செயல்களையும் செய்ய வைக்கும்.

332. ‘‘கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்;

போக்கும் அதுவிளிந் தற்று’’.

பெருஞ் செல்வம் சேர்வது, கூத்தாடுமிடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றது, அச்செல்வம் நீங்கிச் செல்வது, கூத்தாடுமிடத்தில் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றது.

349. “பற்றற்ற கண்ணே பிறப்புஅறுக்கும்; மற்று
நிலையாமை காணப் படும்”.

பற்றை அறுத்தாலே பிறப்பு அறும். இல்லா விட்டால் பிறப்பு மாறி மாறி வந்து நிலையாமை காணப்படும்.

359. “சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்”.

எல்லாப் பொருள்களுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து, பற்றற்று வாழ்ந்தால், சார்வதற்குரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையாது.

380. “ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்”.

ஊழை விட மிக்க வலிமையுள்ளது பேறு எதுவும் இல்லை. ஊழை விலக்கும் பொருட்டு மாற்று வழியைத் தேடினாலும் அங்கும் ஊழே முன்வந்து நிற்கும்.

மேற்கூறப்பட்ட குறள்கள் பெரியபுராணக் கதைகளுக்கு உதாரணமாகும். அத்துடன் அறத்துப்பால், பொருட்பாலில் உள்ள 1080 குறள்களும் பெரிணபுராணத்திற்குப் பொருந்தும். இன்பத்துப் பாலில் உள்ள 250 குறள்களும் புராண இதிகாசங்களுள் கரைந்துள்ளன.

பெற்றோர் செய்யும் நன்மை தீமைகள் பிள்ளைகளைப் பாதிக்குமென்று சொல்கிறார்கள். ஒன்றும் அறியாத பிள்ளைகள் தண்டிக்கப்படுவது நியாயமா...?

சைவசித்தாந்தப்படி ஒருவர் செய்யும் நன்மை தீமைகள் இன்னொருவரைச் சென்றடையாது. “தாயும் பிள்ளையும் ஒன்றைன்றாலும் வாயும் வயிறும் வேறு” என்றொரு முதுமொழி இருக்கிறது.

பிள்ளை கர்ப்பப்பையை விட்டு வெளியே வந்ததும் தாயை விட்டுப் பிரிகிறது. உயிர்கள் யாவும் கர்ப்பப்பைக்குள் இருக்கும் வரை தாயின் இரத்தமே அவற்றிற்கு உணவாகிறது. தாயைப் பாதிக்கும் நோய்கள் கர்ப்பப்பையில் இருக்கும் உயிரைப் பாதிக்கும். அதனால் தாயே மருந்துண்கிறாள். பிள்ளை பிறந்த பின்பு பாலூட்டும் வரை தாயின் இரத்தத்தொடர்பு நீடிக்கும். அதன் பின் அன்பான உறவு தான் தொடரும்.

பிள்ளையின் முதல் ஆசிரியை தாய். அவள் தான் பிள்ளைக்கு உலகை அறிமுகஞ் செய்கிறாள். அதன் பின் பாடசாலை, அயவலர், நண்பர்களென தனது உறவைப் படிப்படியாகப் பிள்ளை அதிகரிக்கும்.

பிள்ளைகள் குடும்பத்தினருடன் அதிக நேரம் தங்கியிருப்பதால் குடும்பத்தினரைப் பார்த்தே தனது பழக்க வழக்கங்களை மேம்படுத்திக் கொள்ளும். அதனால் பெற்றோர்கள் முன்மாதிரியாக நடந்துகொள்ளல் வேண்டும். மற்றவர்களை ஏமாற்றி வாழும் குடும்பத்தவர்களோடு வாழும் பிள்ளைகள் ஏமாற்றுக்காரர்களாக வளரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாவார்கள்.

பொய், களவு, சூது, வஞ்சகம் கொண்ட பெற்றோரில் பலர் தமது பிள்ளைகளையும் அப்படியே வளர்க்க முயற்சிப்பார்கள்.

தான் செய்வது தான் சரியென்று விட்டுக்கொடுக்காது வாழும் பெற்றோரைப் பார்க்கும் பிள்ளைகள் அவர்களைப் பின்பற்றி வாழத்தான் முயலும். ஏனெனில் பெற்றோரில் உள்ள குணங்கள் பிள்ளைக்கு இருக்குமென்று உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

"தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை" என்றொரு முதுமொழியுண்டு. இவையெல்லாம் அனுபவஸ்தர்கள் கூறியவை.

ஓர் உயிர் உடலை விட்டு பிரிந்தவுடன் மறுபிறப்பு எடுத்துவிடும் என்றும், ஓர் உயிர் ஒரு போதும் தனித்திராது என்றும் சைவசித்தாந்தம் கூறுகிறது. அத்துடன் அவ்வுயிர் முற்பிறப்பில் செய்த பாவபுண்ணியங்களுக்குகேற்ற கர்பப்பையைத் தான் சென்றடைவதாக சைவசித்தாந்தம் கூறுகின்றது. அதனால் முற்பிறப்பில் நல்ல செயல்களைச் செய்த உயிர்கள் நற்பலனையும் தீய செயல்களைச் செய்த உயிர்கள் தீய பலனையும் அனுபவிக்கும்.

நற்செயல்கள் புரிந்த உயிர்கள் நல்ல கர்ப்பப்பையைச் சென்றடைந்து மீண்டும் பிறந்து நல்ல செயல்களைச் செய்து இன்பம் அனுபவிக்கும் என்று சைவசித்தாந்தம் கூறுகின்றது. இதைப் பகவத்கீதையும் கூறுகிறது.

பெற்றோர் செய்வது பிள்ளைகளைச் சென்றடையாது. ஒவ்வொருவரும் தாம் தாம் செய்பவற்றைத் தான் அனுபவிக்கிறார்கள்.

திருவள்ளுவர் மனித வாழ்வின் அனைத்துக் கூறுகளுக்கும் விளக்கம் கூறியுள்ளார். சைவசித்தாந்தத்தை முழுமையாகக் கற்ற அவர் மனித வாழ்வைப்பற்றி மிகவும் நுட்பமாகக் கூறியுள்ளார்.

50. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்".

அறநெறிக்குட்பட்டு இவ்வுலகில் வாழும் இல்வாழ்வான் வானுலகில் வாழும் தெய்வங்களைப் போல் போற்றப்படுவான்.

60. "மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு".

மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும் அதன் பேறாக நல்ல மக்களைப் பெறுதலே நல்லணிகலம் என்றும் பெரியோர் கூறுவர்.

61. "பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த
மக்கட்பேறு அல்ல பிற".

அறிவுடைய மக்களைப் பெறுவதை விடப் பெரும்பேறு எவையும் இருப்பதை நாம் அறிந்ததில்லை.

337. "ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல".

ஒரு வேளையாவது முறையோடு வாழவேண்டும் என்பதை அறியாதவர்கள் வீணாகப் பல கோடி எண்ணங்களை எண்ணுகிறார்கள்.

359. ‘‘சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்

சார்தரா சார்தரும் நோய்’’.

எல்லாப் பொருள்களுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து, பற்றற்று வாழ்ந்தால், சார்வதற்குரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையாது.

380. ‘‘ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று

சூழினும் தான்முந் துறும்’’.

ஊழை விட மிக்க வலிமையுள்ளது பேறு எதுவும் இல்லை. ஊழை விலக்கும் பொருட்டு மாற்று வழியைத் தேடினாலும் அங்கும் ஊழே முன்வந்து நிற்கும்.

மனிதன் வாழும் முறைகளைப் பற்றி வேத உபநிடதங்களும் இதிகாச புராணங்களும் விரிவாகக் கூறுகின்றன. இதிகாச புராணங்கள் கதைகள் மூலம் கூறுவதை வேத உபநிடதங்கள் தத்துவம் மூலம் வடமொழியில் கூறுகின்றன. வேத உபநிடதங்கள் தத்துவம் மூலம் வடமொழியிற் கூறியவற்றைத் திருவள்ளுவர் அழகு தமிழில் கூறியுள்ளார். அவரின் கூற்றுப்படி ஒவ்வொருவரும் செய்யும் செயல்கள் தான் அவர்களுக்கு இன்ப துன்பங்களைக் கொடுக்கின்றன.

351. ‘‘பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும்

மருளான்ஆம் மானாப் பிறப்பு’’.

மெய்ப் பொருள் அல்லாதவற்றை மெய்ப் பொருள் என்று தவறாக எண்ணுவதால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும்.

கோபம், பொறாமை, அவா போன்ற தீய குணங்கள் தான் மனிதனிடம் மலிந்துள்ளன. நல்ல குணங்களை யாரிடமும் எதிர்பார்க்க முடியாதுள்ளது. இது ஏன்?

எதை வைத்துக்கொண்டு அப்படி முடிவு செய்கிறீர்? நல்ல குணம் உள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகள் நல்ல மனிதர்களையும் கோபங்கொள்ள வைக்கின்றன. அவர்களது கோபம் சில கணங்களில் மறைந்துவிடும். பின் தாம்கோபங் கொண்டதை நினைத்து அவர்கள் மனம்வருந்துவார்கள்.

சிலர் நல்லவர்கள் போல நடிப்பார்கள். கீதையில் கிருஷ்ணன் உணவுவகை தான் மனிதனின் உணர்வுகளை நிர்ணயிக்கின்றன. என்று சொல்கிறார். உண்ட உணவு தான் தேகத்தில் உணர்வுகளை உண்டாக்கும். உடலில் மிகுந்த பற்றுள்ளவர்கள், பதவியில் மிகுந்த பற்றுள்ளவர்கள், பொருட்களில் மிகுந்த பற்றுள்ளவர்கள் தான் கோபப்படுவார்கள், பொறாமைப்படுவார்கள், அவாப்படுவார்கள்.

29. "குணமென்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது".

நல்ல பண்புகளில் மலை போல உயர்ந்து நிற்கும் பெரியோர், ஒரு கணப்பொழுதே கோபம் கொள்வர். ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.

163. "அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்

பேணாது அழுக்கறுப் பான்".

தனக்கு அறமும் ஆக்கமும் வருவதை விரும்பாதவனே, பிறனுடைய ஆக்கத்தைக் கண்டு மகிழாமல் அதற்காகப் பொறாமைப்படுவான்.

165. "அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்

வழுக்கியும் கேடுஈன் பது".

பொறாமை உள்ளவர்களுக்கு வேறு பகை தேவையில்லை. அது ஒன்றே போதும். பகைவர் தீங்கு செய்யாவிட்டாலும் தவறாமல் தீங்கை அது செய்யும்.

167. "அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்

தவ்வையைக் காட்டி விடும்".

பொறாமை உடையவனைக் காணப் பொறுக்காத திருமகள், தன் தமக்கைக்கு அவனைக் காட்டிவிட்டு நீங்கிச்சென்று விடுவாள்.

251. "தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்

எங்ஙனம் ஆளும் அருள்?".

தனது உடலை வளர்ப்பதற்காக மற்றோர் உயிரின் உடலை உண்கின்றவன் எவ்வாறு அருள் உள்ளவனாக இருக்க முடியும்.

304. “நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்

பகையும் உளவோ பிற?”.

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ?.

310. “இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்

துறந்தார் துறந்தார் துணை”.

கடுங்கோபம் கொள்பவர் இறந்தவனைப் போன்றவர். கோபத்தை அடியோடு விட்டவர் துறவிக்கு ஒப்பானவர்.

367. “அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை

தான்வேண்டும் ஆற்றான் வரும்”.

ஒருவன் அவாவை ஒழித்தால், அவன் இன்பமாக வாழ்வதற்கு உரிய எல்லா நன்மைகளும், அவன் விரும்புமாறு வந்தடையும்.

368. “அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம் அ.்.துஉண்டேல்

தவாஅது மேன்மேல் வரும்”.

அவா இல்லாதவர்களுக்குத் துன்பம் வராது. அவா இருந்தால் எல்லாத் துன்பங்களும் மேலும் மேலும் தொடர்ந்து வரும்.

370. “ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே

பேரா இயற்கை தரும்”.

ஒரு பொழுதும் நிறைவான தன்மையைப் பெறாத அவாவை ஒழித்தால், அந்நிலை எப்பொழுதும் மாறாதிருந்து இன்ப வாழ்வைத் தரும்.

மேற்கண்ட குறள்களில் வள்ளுவர் கோபத்தாலும் பொறாமையாலும் அவாவாலும் வரும் கேடுகளைப் பற்றிக் கூறுகிறார்.

வாழ்க்கையில் முன்னேறவேண்டுமென்ற நினைப்பு, அடுத்தவன் என்னைவிட மேன்மையாக வாழக்கூடாது என்ற எண்ணம், தான் மட்டும் தான் சகலதும் அறிந்தவன் என்ற தன்மை போன்றன கோபம், பொறாமை, அவா என்பவற்றை உண்டாக்கும்.

கோபம் தீயது. அதை விலக்கவேண்டும் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் அவர்களால் அதை நடைமுறைப்படுத்த முடிவதில்லை. கோபப்படுவோர் தம்முடன் நெருங்கி உறவாடுவோர்களிடமே கோபங்கொள்கிறார்கள்; பொறாமைப்படுகிறார்கள். இது வாழ்க்கையில் உண்டான போட்டியால் தான் உண்டாகிறது.

தனது குற்றங்களை ஏற்றுக்கொள்ள முடியாத தன்மையும், மற்றவர்களை மதிக்காத தன்மையும் விட்டுக்கொடுக்காத நிலையுமே கோபம் வரக்காரணமாகும். இக்கோபம் பல தீய விளைவுகளை உண்டாக்கிய பின்பும் உண்மைநிலையை உணர முடியாதவர்கள் பலர் உலகில் வாழ்கின்றனர்.

கோபத்தால் தான் பொறாமை உண்டாகிறது. இரண்டும் சேர்ந்துவிட்டால் பல தீய குணங்கள் வந்தடைந்துவிடும்.

பொறாமை மிகவும் பயங்கரமானது. பொறாமை காரணமாகத் தான் கௌரவர்கள் அழிந்தார்கள். மந்தரையின் பொறாமையால் தசரதன் இறந்தான்; இராமன் காட்டுக்குச் சென்றான் இவற்றைப் படித்த பின்பும் மனிதனால் திருந்த முடியவில்லை. இதற்குக் காரணம் பற்று. பற்றையும் நான் எனது என்ற அகங்காரத்தையும் விடும் வரையும் மனிதனுக்கு நிம்மதி வராது.

அடக்கமாக வாழ்ந்தால் இன்பம் தானாகவரும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

125. ‘‘எல்லார்க்கும் நன்றுஆம் பணிதல்; அவருள்ளும்

செல்வர்க்கே செல்வம் தகைத்து’’.

பணிவு உடையவர்களாக வாழுதல் எல்லோருக்கும் நன்மை தரும். அவர்களுள் செல்வந்தர்களுக்கு அது மற்றொரு பெரும் செல்வமாகும்.

128. ‘‘ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்

நன்றுஆகா தாகி விடும்’’.

ஒருவன் கூறும் சொற்களில் ஒன்றேனும் தீமை பயக்குவதாக இருந்தால், அச்சொல் அவனது ஏனைய நல்ல பண்புகளையும் கெடுத்துவிடும்.

130. “கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி

அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து”.

சினத்தை அடக்கி, கற்க வேண்டியவற்றைக் கற்று அடக்கம் உடையவனாக வாழும் ஒருவனை, தரும தேவதை தேடிச்சென்று குறைநிறைகளைக் கேட்டு உதவி செய்வாள்.

அன்பாக இருத்தலும் இனிய சொல் பேசுவதாலும் என்றும் இன்பம் வரும் என்று வள்ளுவர் கூறுகிறான்.

92. “அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து

இன்சொலன் ஆகப் பெறின்”.

மனம் மகிழ்ந்து பொருள் கொடுப்பதைவிட முகமகிழ்ச்சியோடு இனிமையாகப் பேசுவதே நன்று.

95. “பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு

அணி;அல்ல மற்றுப் பிற”.

பணிவு உடையவனாகவும், இன்சொல் பேசுபவனாகவும் இருத்தலே ஒருவனுக்கு சிறந்த அணிகலனாகும். மற்றைய அணிகள் அணிகள் அல்ல.

98. “சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்

இம்மையும் இன்பம் தரும்”.

பிறருக்குத் துன்பத்தைக் கொடுக்கும் சிறுமையில் இருந்து நீங்கிய இனியசொற்கள், இம்மையிலும் மறுமையிலும் பேசுவோருக்கு இன்பம் தரும்.

74. "அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்

நண்புஎனும் நாடாச் சிறப்பு".

அன்பு எல்லோரிடமும் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அந்த அன்பு, நட்பு என்ற அளவற்ற சிறப்பினையும் தரும்.

75. "அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து

இன்புற்றார் எய்தும் சிறப்பு".

உலகில் இன்பமாக வாழ்கின்றவர்கள் அடையும் சிறப்பு, எல்லோரிடத்தும் அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று அறிஞர் கூறுவர்.

80. "அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு".

அன்பு வழியில் இயங்கும் உடம்பே உயிர் உள்ள உடம்பாகும். அன்பு இல்லாத உடம்பு எலும்புகளைத் தோல் போர்த்த வெற்றுடம்பு ஆகும்.

மேற்கூறப்பட்ட குறள்களுக்கமைய வாழ்க்கையை நடத்துவோரிடம் கோபம் பொறாமை, அவா என்பன இருக்கமாட்டாது.

## அன்பு பலவகை இதற்கு விளக்கம் என்ன?

காதலனுக்குக் காதலி எப்போதும் தேவதையாகத் தான் தோன்றுவாள். அந்தத் தேவதை உள்ளத்தில் வாழ்ந்தால் காலமெல்லாம் தேவதையாகவே தோன்றுவாள். அவள் உடலில் வாழ்ந்தால் ஓரிரு நாட்களில் அலங்கோலமாகி விடுவாள்.

காதல் என்பது என்ன? அன்பு என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்.

“அன்பே சிவம்” என்கிறார் திருமூலர். ஒரு கணவன் மனைவி மீது செலுத்தும் அன்பானது இறைவன் மீது செலுத்தப்படுவது என்கிறது. கேனோ உபநிடதம்.

“காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி” என்கிறார் சம்பந்தர்.

எந்த உயிர்களிடத்தும் செலுத்தும் அன்பும் இறைவனைச் சென்றடையும் என்று சைவசமயம் கூறுகிறது. அதனால் தான் கொன்று தின்னாமையை வலியுறுத்துகிறது.

கடவுளைக் காதலனாக நினைத்துருகிப் பாடும் சம்பிரதாயத்தையுடையது வைணவமதம் பல ஆழ்வார்களது பிரபந்தங்கள் காதற் சுவைமிக்கவை.

இந்துத் தெய்வங்கள் பல காதல் வாழ்க்கை வாழ்ந்தவர்கள். சிவன் உமையம்மை மீது காதல் கொண்ட வரலாற்றையும்இ முருகன் வள்ளிஇ தெய்வானை மீது கொண்ட காதல் தன்மையையும் படித்தவர்கள் இந்துக்களாகிய நாம்.

அத்துடன் சிவன் சுந்தரருக்காகக் காதல் தூது சென்றமையையும் நாம் அறிவோம்.

எனவே இன்றைய இளைஞர்கள் காதல் கொள்ளக் கூடாதா என்று கேட்கலாம். அத்துடன் பெற்றோர் பலர் காதல் திருமணத்தை அங்கீகரிப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு. காதல் புனிதமானது மனிதனைப்பூரணப்படுத்துவது அப்படியாயின் அதற்கேன் தடை?

தடையை யாரும் விதிக்கவில்லை. அதற்கான தகுதியைப் பெற்ற பின்பு காதல் கொள்ளுங்கள். காதல் என்பது திருமணத்திற்கு முன்பு ஒரு பெண்ணை விரும்புவதல்லஇ திருமணமான பின்பு தன் மனைவியை உயிருக்குயிராக நேசிப்பதும் காதல் தான்.

காதல் என்பதை அறியாத பலர் திருமணத்திற்கு முன்பு ஒரு பெண்ணின் மீது செலுத்தப்படும் அன்பே காதல் என நினைக்கின்றார்கள்.

காதல் என்பது "பாசத்தின் முதிர்ச்சி" என்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

அளவுக்கதிகமான பாசம், சொற்களால் வர்ணிக்க முடியாத உறவு, இலக்கணம் கூற முடியாத பற்றுஇ எதையும் எவ்வேளையிலும் செய்து கொடுக்கத் துடிக்கும் மனம்இ சுயநலம் கருதாத தன்மை இதுதான் அன்பு.

இந்த வகையில் இறைவன் மீது நாயன்மார்கள் கொண்ட அன்பும் காதல் தான்.

பிள்ளைகள் மீது பெற்றோர் வைத்த அன்பும் காதல் தான். ஒரு பெண் மீது நலம் கருதாது வைத்த அன்பும் காதல் தான்.

காதலுக்காக அழிந்த சாம்ராட்சியங்கள் எத்தனை? வரலாறு எமக்கு சொல்லிக் கொண்டிருக்கின்றது. காதலுக்காக

வாழ்ந்தமாந்தரின் வாழ்க்கையை நாம் அறிந்து வைத்துள்ளோம். அவர்கள் அழியாத வரலாற்றுப் புருசர்களாக மக்களின் மனங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்

மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பாக அன்பான காதலிக்கு (மனைவிக்கு) அடங்காத காதலன் (கணவன்) இருக்கமாட்டான். காட்டாற்று வெள்ளம் போலத் தறிகெட்டு ஓடும் உணர்வுகளுக்குக் கருணையான அவளது விழிகள் அணையாக அமையும். காட்டுத்தீப் போலக் கொழுந்து விட்டெரியும் ஒருவனது கோபத்திற்கு அன்பானவரின் புன்சிரிப்பு பெருமழையாகி அத்தீயை அணைக்கும்.

கிணற்று நீரை இறைத்தால் எங்கும் பரந்து செல்லுமே தவிரப் பயிர்களுக்குப் பயன் தரமாட்டாது. பயிர்களுக்குப் பயன் தரவேண்டுமாயின் வாய்க்கால் அமைத்தல் வேண்டும். இந்த பயன் தரும் வாய்க்காலாக அமைந்து காலமெல்லாம் மக்கள்இ இனத்தவர்இ பெற்றோர்க்கு உதவுவதாக இருப்பது அன்பு.

அன்பைப் பற்றி வள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

74. அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்புஎனும் நாடாச் சிறப்பு.

அன்பு எல்லோரிடமும் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அந்த அன்பு, நட்பு என்ற அளவற்ற சிறப்பினையும் தரும்.

79. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு?

புறத்து உறுப்புக்கள் யாவும் அழகானவையாகவும் பலமானவையாகவும் இருந்தாலும் அக உறுப்பாகிய அன்பில்லாவிட்டால் அவற்றால் பயன் ஏதும் இல்லை.

80. அன்பின் வழியது உயிர்நிலை அ்துஇலார்க்கு
 என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பு வழியில் இயங்கும் உடம்பே உயிர் உள்ள உடம்பாகும். அன்பு இல்லாத உடம்பு எலும்புகளைத் தோல் போர்த்த வெற்றுடம்பு ஆகும்.

52. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
 எனைமாட்சித்து ஆயினும் இல்.

இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்புகள் இல்லாளிடம் இல்லாவிட்டால், ஒருவனுடைய வாழ்க்கையில் பல்வேறு விதமான வசதிகள் இருந்தாலும் அதனால் பயன் ஏதும் ஏற்படமாட்டாது.

59. புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
 ஏறுபோல் பீடு நடை.

கணவனது புகழைக் காக்க விரும்பும் மனைவி இல்லாதவர்களுக்கு, இகழ்ந்து பேசும் பகைவர் முன் காளை போல் நடக்கும் கம்பீரநடை இல்லை.

இக்குறள்கள் மூலம் வள்ளுவர் அன்னைப் பற்றிக் கூறுவதைப் புரிந்து கொண்டால் வாழ்வு சிறக்கும்.

92. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
 இன்சொலன் ஆகப் பெறின்.

மனம் மகிழ்ந்து பொருள் கொடுப்பதைவிட முகமகிழ்ச்சியோடு இனிமையாகப் பேசுவதே நன்று.

94. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மட்டும்
 இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

எல்லோரும் இன்பம் அடையும்படியாக இன்சொல் பேசுவோருக்கு துன்பத்தை உண்டாக்கும் வறுமை இல்லாமல் போகும்.

இனியவை கூறல் என்பது அன்பான வார்த்தைகளைக் கூறுவதாகும்.

அன்பென்பது உயிர்களிடத்தில் முரண்பாடு கொள்ளாது அனுசரித்து வாழ்வது. குடும்பத்தவருடன் அன்பாக வாழ்பவன் சகல உயிர்களுடனும் அன்பாக வாழ்வான். எனவே குடும்பத்தவர்களுடன் அன்பாக வாழப்பழகுங்கள்.

## சந்தர்ப்ப் சூழ்நிலைகள் எப்படி உண்டாகின்றன?

சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகள் எல்லா உயினங்களுக்கும் வந்து போகின்றன. சந்தர்ப்ப சூழ்நிலைகள் இறைவனால் உயிரினங்களுக்குக் கொடுக்கப்படும் வரம். அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி உயர்ந்தவர்கள் பலர் இருக்கின்றனர். அவற்றைத் தவறான முறையிற் பயன்படுத்தி கெட்டழிந்து போனவர்களும் உண்டு. அவற்றைப் பயன்படுத்த தெரியாமல் இருப்பவர்களும் உண்டு.

வாழ்க்கையில் சந்தர்ப்ப சூழ்நிலைகள் எப்போதாவது ஒரு முறை தான் வரும். அதை நல்ல முறையில் பயன்படுத்தித் தம் வாழ்க்கையை மேன்மையடையச் செய்தல் வேண்டும்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்குபவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மகா புத்திசாலிகள், நாட்டின் நன்மைக்காக, சமூகத்தின் நன்மைக்காகக் கடவுளிடம் வேண்டி

எது எது செய்ய வேண்டுமோ அதை அதை செய்வதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளை சிலர் உருவாக்குகிறார்கள்.

இந்து சமயத்தை எடுத்துக்கொண்டால் நாயன்மார்கள்இ ஆழ்வார்கள்இ முனிவர்கள்இ அரசர்கள்இ அசுரர்கள் போன்றோர் தமது காரியத்தைச் சாதிப்பதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கி இருக்கிறார்கள். அத்துடன் சமய வளர்ச்சிக்காக கடவுளே பக்தர்களுக்குச் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுப்பதும் உண்டு. அக்கிரமங்களை அழிப்பதற்கு இந்து மதக் கடவுள்கள் பலர் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளனர்.

நியாயமானஇ நீதியானஇ ஒரு செயலுக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கினால் வெற்றியடையலாம் என்பதற்கு நாயன்மார்களும்இ ஆழ்வார்களும் சாட்சியாக உள்ளனர். அனியாயங்கள் செய்வதற்காகச் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கியோர் அச்சந்தர்ப்ப சூழ்நிவைகளாலேயே அழிந் தொழிந்து போனதைப் பாரதமும் இராமாயனமும் கந்தபுராணமும் மிக அழகாகக் கூறுகின்றன.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கி மனிதனைச் சோதிப்பதை இறைவன் தன்பணியாகக் கொண்டிருக்கிறார். அப்பரைஇ சுந்தரரைஇ மாணிக்கவாசகரைஇ சம்பந்தரை எப்படியெல்லாம் சோதனை செய்தார்.

அரிச்சந்திரன் ஒரு பொய்யைக் கூறியிருந்தால் தனக்கேற்பட்ட துன்பங்களைத் தவிர்திருக்கலாம். எப்படியான சந்தர்ப்ப சூழ்நிலைகள் வந்த போதும் அவன் தன்னை இழக்கவில்லை. தர்மத்தை மறக்கவில்லை. அதனால் தான் அவன் இறந்தும் இன்றுவரை மனித மனங்களில் வாழ்கிறான்.

கடைசி மனிதன் வாழும் வரை அரிச்சந்திரன் அவர்களது மனதில் வாழ்வான்.

நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்றுரைத்த நக்கீரனின் மனவலிமையை அளவிட்டுக் கூறமுடியாது. சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இறைவன் எம்மைச் சோதிக்கிறான். எந்த நிலையிலும் தர்மமான முறையில் நடந்தால் நாம் முன்னேறச் சந்தர்ப்பங்களை அடிக்கடி இறைவன் எமக்கு உருவாக்கிக் கொடுப்பான்.

12) பொறுமை தான் யாவற்றையும் தரும். இது உண்மையா...?

பொறுமையைப் பற்றி இந்துமதம் மிகவும் விரிவாகவும்இ பக்குவமாகவும் கூறுகிறது. 'பொறுத்தார் அரசாள்வார்' என்பது முதுமொழி. பொறுமையின் தன்மையைப் பற்றி இதற்கு மேல் கூறத் தேவையில்லை.

இதிகாச புராணங்களில் பொறுமையை இழந்தமையால் நடந்த விபரீதங்கள் ஏராளம். பொறுமையாக இருப்பது நல்லது. அது தவம் செய்வதை விட மேலானது. பொருந்தவஞ்செய்த முனிவர்கள் பலர் பொறுமை இழந்தமையால் தாம் செய்த தவப் பயன் முழுவதையும் இழந்த வரலாற்றை இந்து மதம் கூறுகிறது.

பொறுமைக்கும் ஓர் அளவு உண்டென்பதை இராமனதும், தருமனதும் வாழ்க்கை எமக்கு புரிய வைக்கிறது. தவவலிமை பொருந்திய கௌசிக முனிவன் தன் தவ பலத்தால் கொக்கை எரித்தார். ஆனால் பொறுமையுடன் தனது

குடும்பப் பொறுப்புக்களைச் சுமந்த பெண்ணை எரிக்கமுடியவில்லை. இதிலிருந்து தவத்திலும் பெரியது, உயர்ந்தது பொறுமை என இந்து மதம் வலியுறுத்துகிறது.

பிறர் நமக்குச் செய்யும் துன்பங்களை பொறுமையுடன் தாங்கிக் கொள்வது தவம் செய்வதை விட மேலானது என்கிறது இந்துமதம். திருநாவுக்கரசரைச் சுண்ணாம்பு அறையுள் அடைத்த போதும்இ கல்லோடு கட்டிக் கடலில் விட்டபோதும்இ மதயானையை ஏவிட்ட போதும் அவர் சினங் கொள்ளவில்லை. தன் தவ வலிமையைப் பயன்படுத்தி அவற்றை அழிக்கவில்லை. பொறுமையாக இருந்தார். தண்டித்தவனுக்கே தண்டனை கிடைத்தது.

ஆரம்பத்தில் சிறிய துன்பங்கள் கூடப் பெரிதான தாக்கத்தை உண்டு பண்ணும். பொறுமையுடன் வரும் துன்பங்களைத் தாங்கிக்கொள்ளப் பழகிவிட்டால் மனம் பக்குவப்பட்டு விடும். மனம் பக்குவமடையும் வழிகளைப் பற்றி இந்துமதம் விரிவாகக் கூறுகிறது. ‘‘எல்லாம் சிவன் செயல் என நினைத்தால் துன்பம் வராது. கடவுள் மீது கொள்ளும் அன்பானது வளர்ந்து பக்தியாகின்றது. இந்தப் பக்தியின் உச்சநிலை நம்பிக்கை. கடவுளின் மீது முழுமையான நம்பிக்கை வந்து விட்டால் உலகில் உள்ள செல்வங்க ளெல்லாம் எம் காலடிக்குள் வந்து விடும். எந்த தீய சக்தியும் எம்மை அணுகமுடியாது.

கடவுள் நம்பிக்கை மூலம் கடவுளின் அனுக்கிரகம் முழுவதம் கிடைத பின் பொறுமையாக நாம் செயற்பட்டால் தான் நாம் பெற்றுக் கொண்ட பயன் நீடிக்கும். பொறுமைக்கு எதிரிகள் பல. பொறாமைஇ அழுக்காறுஇ காமம்இ ஆசைஇ

சினம் முதலியன. இதில் ஒன்று வந்தாலும் பொறுமை இழப்பதன் மூலம் சகலவற்றையும் இழந்து விடுகிறோம்.

சராசரி மனித வாழ்வில் யாவற்றையும் பொறுமையாக ஏற்றுக் கொள்பவன் தான் வாழ்கையில் வெற்றி பெறுகிறான். காதலில் வெற்றி பெற வேண்டுமா? பொறுமையைக் கடைப்பிடி. உத்தியோகத்தில் உயர்வு பெற விரும்புகிறாயா? அப்படியானால் பொறுமையைக் கடைப்பிடி. இப்படி எந்த விசயத்திலும் வெற்றி பெற நினைப்பவன் பொறுமையைக் கடைப்பிடித்தல் வேண்டும். இறைவனே பல அடியவர்களின் பொறுமையைச் சோதித்தாக வரலாறு கூறுகிறது.

பொறுமையாக இருந்தால் பெருந்துன்பமும் சிறிதாகத் தோன்றும். சிறிதளவு இன்பமும் பெரிதாகத் தோன்றும். ஆசைஇ அவா, பேராசை யாவும் அற்றுப் போகும். பல வருடங்கள் தவஞ் செய்து பெற்ற பயன்கள் யாவும் ஒரு கணம் பொறுமை இழப்பதன் மூலம் பஞ்சாகப் பறந்துவிடும். பொறுமை ஞானத்தை விட அழுத்தமானது; ஆழமானது; உறுதியானது; உண்மையானது; உயர்ந்தது.

காட்டிற்குச் சென்று தவம் செய்வதற்குக் கூடத் தகுதிகளை வரையறை செய்து வைத்துள்ள மதம் இந்துமதம். பிரமச்சாரியம்இ களஸ்திரம்இ வானப்பிரதிஷ்டம்இ சன்னியாசம் என்ற ஆச்சாரிய தர்மங்கள் லௌகீக வாழ்க்கை நெறிக்கான நெறிகளையும் ஆன்மீக ஈடேற்றத்திற்கான வழிவகைகளையும் எடுத்துக்கூறுகின்றன. இந்து ஒருவன் கல்விகற்கும் காலம்இ இல்வாழ்க்கை நடத்தும் காலம், ஆன்மீகஈடேற்றம் பெறும் காலங்களில் அனுட்டிக்கவேண்டிய தர்மநெறிகளை ஆச்சிரம தர்ம மூலம் கூறும் இந்துமதம் இக் காலங்களில் ஒருவன் பொறுமையைக் கடைப்பிடிக்க

வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறது. குருவினிடத்தில் கல்வியை பொறுமையாகக் கற்றல் வேண்டும். இல்வாழ்க்கையின் போது குடும்பத்தினருடனும் இனத்தவர்களுடனும், அயலவர்கள், நண்பர்களுடனும் பொறுமையுடன் வாழப்பழகிக் கொள்ளவேண்டும். பின் சன்னியாசம் மேற்கொள்ளும் காலத்தில் ஆசைகள், பற்றுக்கள் இன்றி பொறுமையாகத் தவஞ்செய்தல் வேண்டும் என்று கூறுகிறது.

இந்துமதம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு யோகங்களின் மூலம் ஆன்மா முத்தியடையுமென்று கூறுகிறது. இந்த நான்கையும் பொறுமையுடன் செய்தால் தான் உரிய பலனை அடையலாம்.

துன்பங்கள் வாழ்வில் வந்தால் தான் வாழ்வு நிறைவுபெறும். துன்பங்கள் தொடர்வதால் படிப்படியாக மனம் வலுவடைகிறது. உலகம் நாம் வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும். இதற்காகக் கோபங்கொள்ளலாமா..?

நடப்பது நடந்தே தீரும். நடக்காதது நடக்காது. குதிரைக்குக் கொம்பு முளைக்காது. எருமைக்கு கொம்பு இல்லாமற் போகாது. இது படைப்பின் தத்துவம். இதை நினைத்து அமைதியாக இரு. அமைதி பொறுமையைத்தரும். துன்பங்களை மறந்துவிடு. சிறிதளவு இன்பம் கிடைத்தாலும் அதைப் பெரிதாக நினை. விதிப்படி தான் எல்லாம் நடைபெறும் என்று எண்ணிப் பொறுமையாக உனது காரியங்கனைச் செய். கட்டாயம் உனக்கு வெற்றி கிடைக்கும். பொறுமை கடலைவிடப் பெரியது; ஆழமானது, பொறுத்திரு. முயற்சி செய், முன்னேறு.

பொறுமையைப்பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

154. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

ஒருவன் நிறையுடையவனாக எப்பொழுதும் இருக்க வேண்டுமென விரும்பினால், அவன் பொறுமையைப் போற்றி ஒழுகுதல் வேண்டும்.

156. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

தீங்கு செய்தவரை பொறுக்காமல் வருத்தினவருக்கு ஒருநாள் மட்டுமே இன்பம் உண்டாகும். பொறுத்தவர்களுக்கு உலகம் அழியும் வரைக்கும் புகழ் உண்டு.

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

செருக்கினால் தீங்கு செய்தவரைத் தாம் தம்முடைய பொறுமையினால் பொறுத்து மறந்துவிடல் வேண்டும்.

159. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

வரம்பு கடந்து கொடிய சொற்களைப் பேசுபவர்களைப் பொறுத்துக்கொள்பவர், துறந்தவர்களைப் போலத் தூய்மையானவர் ஆவர்.

160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

உணவு உண்ணாமல் நோன்பு இருப்பவர், பிறர் சொல்லும் தீய சொற்களை பொறுக்கும் பொறுமையானவருக்கு அடுத்த பெரியவர் ஆவார்.

பொறுமையைப் பற்றித் திருவள்ளுவரை விடச் சிறப்பாக யாரும் கூறவில்லை. பொறுமையாக இருந்தால் நினைத்தவற்றை எல்லாம் பெறலாம்.

## விஞ்ஞான மெய்ஞ்ஞானப் பலன்களில் சிறப்பானது எது?

பூமியில் நடமாடும் தெய்வங்கள் என்று எல்லோராலும் சொல்லப்படுபவர்கள் மாதா, பிதா என்று அழைக்கப்படும் பெற்றோர். இவர்களைவிட மாதா பிதாக்களாலும் தெய்வங்களெனப் போற்றப்படுபவர்கள் வைத்தியர்கள் நோயைத் தீர்த்து வாழவைப்பவர்கள் அவர்கள்.

ஆனால் இந்த வைத்தியர்களால் மரணத்தைத் தள்ளிவைக்க முடியுமா? அல்லது நோயை மாற்ற முடியுமா...?

வைத்தியர்களுக்கெல்லாம் வைத்தியநாதனாகச் சிவன் இருக்கிறான். சிவனால் தான் எல்லா நோய்களையும் குணப்படுத்த முடியும் என்கிறார்கள் ஆத்மீகவாதிகள். எத்தனையோ நோய்களுக்கு இன்னும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளும் நோயை முற்றாகக் குணப்படுத்துவதில்லை.

எத்தனையோ வருடங்கள் மருத்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் இறுதியாக கூறுவது "நான் என்னாலானவற்றையும் செய்துவிட்டேன். இனிக் கடவுள் தான்"

பல்வேறுதுறைகளில் ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகள் புதிதாக எதையும் சொல்லவில்லை. இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்களுக்கு முன்பு நமது சித்தர்களால் சொல்லப் பட்டவற்றைத் தான் திரும்பச்சொல்கிறார்கள்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. 'ஒரு மனிதன் தனது பற்களாலேயே தனது புதைகுழியை வெட்டுகிறான்'

என்று. இலை, குழைகள், கனிவகைகளைப் புசித்த நம் முன்னோருக்கு நோய்கள் அதிகம் இருக்கவில்லை. தேவையற்ற உணவுகளை உண்பதாலும், அளவுக்கதிகமாக உண்பதாலும் தான் நோய்கள் எம்மை அணுகுகின்றன. அதற்காகத்தான் இந்து மதம் எந்தெந்த உணவுகளை உண்ணவேண்டும், எந்தெந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு இரசாயனப் பசளை பாவிக்கப்படவில்லை. கிருமி நாசினிகள் தெளிக்கப்படவில்லை. காற்றுச் சுத்தமாக இருந்தது. சுத்தமான காற்றும், சுத்தமான நீரும் நோயைத் தடுக்கும் சக்தியுள்ளவை. இன்று சுத்தமான காற்றிருக்கா..? இல்லை சுத்தமான நீர் தன்னும் இருக்கா...?

விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து முன்னேற்றம் அடைந்ததாகக் கூறிக்கொண்டு சூழலை மாசுபடுத்தியது தான் மிச்சம். இந்த விஞ்ஞானிகளால் நாளை நடப்பதை ஆரூடம் கூறமுடியுமா...?

எப்பொழுது ஒருவனுக்கு மரணம் வருமென்று கூறமுடியுமா...?

இல்லை உயிர் எங்குள்ளது என்பதைக் காட்ட முடியுமா...?

பிறப்பில் தற்பொழுது விஞ்ஞானிகள் புதுமை செய்வதாகக் கூறிக்கொள்கிறார்கள். முருகன் எப்படித் தோன்றினான்? வீரபத்திரர் எப்படித் தோன்றினார்? இவர்களைவிட ஐயப்பன் எப்படித் தோன்றினார்?

பிள்ளையாரின் தலை துண்டிக்கப்பட்டதும் யானையினது தலை பிள்ளையாருக்குப் பொருத்தப்பட்டது.

இராவணன் கைலாயமலையைத் தூக்கி இருக்கிறான். அத்துடன் விமானத்தில் பறந்து திரிந்திருக்கிறான். அனுமான் வானவெளியூடாகப் பறந்து சென்றிருக்கிறான். சூரனின் தலை வெட்ட வெட்ட உடலோடு பொருந்தியுள்ளது. இவையெல்லாம் நாம் கற்றவை. இவை பொய்யென்றால் தற்பொழுது பத்திரிகைகளில் வருவது எப்படி மெய்யாகும்?.

வாழ்க்கையை நல்லமுறையில் பண்படுத்த உதவுவது இந்து சமயம். இதற்காக வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைப் பற்றிக்கூறுகிறது. இந்தத் துன்பங்களுக் கெல்லாம் காரணம் பிறப்பு. பிறவாதிருந்தால் துன்பம் இல்லை. கிடைத்த மனிதப்பிறவியில் நன்மைகளைச் செய்து சமயநெறியில் நடந்து இறைவனை அடையென்று கூறுகிறது இந்துசமயம்.

ஒரு மனிதனின் பிறப்பையோ அல்லது இறப்பையோ யாரும் கூறமுடியாது. இறக்கும் வரைக்கும் இன்பமாக வாழவேண்டும். இருக்கும்போது நடந்துகொண்ட முறைகள் மூலம் இறந்த பின்பும் இன்பமாக வாழச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

புண்ணியம், பாவம் என்பன உண்டு என்பதற்கு அத்தாட்சியாக மிருகங்களைக் கூடக் கூறலாம்.

எனது அயல்வீட்டு நாய் நான்கு குட்டிகளை ஈன்றது. நான்கையும் நான்கு பேர் பிடித்துக்கொண்டு சென்றனர்.

ஒன்று ஒருவரின் வீட்டில் கதிரையில் படுத்திருக்கிறது. நேரத்திற்கு நேரம் சத்தான உணவு கிடைக்கிறது. குளிப்பாட்டிச் செல்லமாக வைத்திருக்கிறார்கள்.

மற்ற நாய் குப்பை மேட்டில் படுத்திருக்கிறது. இன்னொன்று இறந்துவிட்டது. மற்றையது அரைவயிற்று உணவுடன் காலந்தள்ளுகிறது. நான்கிற்கும் ஏன் இந்த நிலை?. அவரவர்கள் முற்பிறப்பில் செய்த பாவபுண்ணியப் பலன்கள் தான் இவற்றிற்குக் காரணம்.

இப்பாவ புண்ணியப் பலன்களை நாம் எம்மோடு வாழும் உயிர்களின் வாழ்க்கையிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

எவ்வுயிர் மீதும் விருப்பு வெறுப்பில்லாத இறைவனின் திருவடிகளை நினைக்கின்றவர்களுக்கு ஒருபோதும் துன்பம் இல்லை.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இறைவனின் மகிமையை அறிந்து, அன்பு செலுத்துபவர்களைப் பிறவித்துயருக்குக் காரணமான நல்வினையும் தீவினையும் சேர்வதில்லை.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

ஐம்பொறிகளால் உண்டாகும் ஆசைத் தீயினை அவித்த இறைவனின் பொய்யற்ற ஒழுக்கநெறியில் நிற்போர் என்றும் இன்பமாக வாழ்வர்.

பாவங்கள் சேராதிருக்க இப்படி வாழவேண்டுமென்று திருவள்ளுவர் கூறுகிறார்.


Distributed By :
LANKA BOOK DEPOT
F.L. 1.14, Dias Place,
Gunasingapura,
Colombo - 12.
Tel : 011-2-341942
PRICE : 120.00